தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
முன்வைக்கப்பட்ட நாள்
11 மே 1999




திருவாளர் [illegible] அவர்களால்

# உயர்நிலைக் குழுவின்
# முதல் மற்றும் இறுதி அறிக்கைகள்

(ப.ம.நி.சீ. (எஸ்) துறையின் 28.1.1996 நாளிட்ட அரசாணை (நிலை) எண். 28) படி அமைக்கப்பட்டது.)

சமர்ப்பிப்பட்ட

நடவடிக்கை குறித்த குறிப்புகள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## நீதியரசர் திரு.ஜி.இராமானுஜம் அவர்கள் தலைமையிலான நிர்வாக சீர்திருத்தம் மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பான உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கை.

**2.8.96** நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (என்) துறை அரசாணை நிலை எண்.289–ல் அமைக்கப்பட்ட நிருவாக சீர்திருத்தம் மற்றும் ஊழல் ஒழிப்புக்கான நீதியரசர் திரு.ஜி.இராமானுஜம் தலைமையிலான உயர்நிலைக்குழுவின் முதல் மற்றும் இரண்டாவது இறுதி அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளை அரசு ஆராய்ந்தது. இதன் அடிப்படையில் இப்பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வருமாறு:

பொதுப்பணித் துறை.

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்யும் தற்போதைய செயற்பாட்டு முறை, அனைத்து பொதுவான பொறியியல் பணிகளைப் பொறுத்தமட்டில் அனைத்து அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் தேவைகளுக்கு உதவும் வகையில் விரிவான பதிவாக தொடர்ந்து இருக்கலாம். இந்த பதிவுப் பணியை பொதுப்பணித் துறை மேற்கொள்ளலாம். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | பரிந்துரையை செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 2. | சில துறைகள்/நிறுவனங்களுக்கு தனித் தன்மையானதாக இருக்கக்கூடிய சிறப்புப் பணிகளைப் பொறுத்தமட்டில், வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட காரணங்களுக்காக அந்தந்தத் துறையே தங்களுக்கு ஏற்ற சிறப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்யலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 3. | பணிகளின் மதிப்பிற்கேற்ப, (நிறைவேற்ற தகுதியானவர் என்று கருதப்படக் கூடியவர்கள்) ஒப்பந்தக்காரர்களை ஐந்து வகையாக வகைப்படுத்தும் தற்போதைய நடைமுறை தொடர்ந்து இருக்கலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒப்பந்தக்காரர்களின் பதிவிற்கான வகுப்புகளின் பண வரம்பு கீழ் குறித்தவாறு திருத்தி அமைக்கலாம்.<br>வகுப்பு–1 ரூ.75 இலட்சத்திற்கு மேல்.<br>வகுப்பு–2 ரூ.75 இலட்சம் வரை.<br>வகுப்பு–3 ரூ. 30 இலட்சம் வரை.<br>வகுப்பு–4 ரூ. 15 இலட்சம் வரை.<br>வகுப்பு–5 ரூ.6 இலட்சம் வரை. | ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு பணவரம்பு நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 4. | மாநிலத்தின் யாதொரு பகுதியிலும், அவரவர்களின் வகைகளுக்கேற்ப, பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை கோர, அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களும் (வகை 5 ஒப்பந்தக்காரர் உள்பட) அனுமதிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 5. | ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான நடைமுறை கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு எளிமையாக்கப்படும். | | |
| | i) வருவாய்த்துறை அதிகாரிகளிடமிருந்து செல்வநிலைச் சான்றிதழ் (Solvency Certificate) அளிக்க வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக விண்ணப்பதாரருக்குச் சொந்தமான இயங்கா சொத்துக்கள் குறித்து சான்றுறுதி அலுவலர் (Notary Public) முன் சான்றொப்பமிட்ட ஆணை உறுதிப்பத்திரம் (affidavit) ஒன்றை தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படலாம். | தற்போது நடைமுறையில் உள்ளவாறு ஒப்பந்தக்காரர்கள் வருவாய்த்துறையிடமிருந்து பெறும் செல்வநிலைச் சான்றிதழ் அளிப்பதினைத் தொடரலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| | I, II, III வகை ஒப்பந்தக்காரர்களைப் பொறுத்த வரை, விண்ணப்பதாரர் அவருடைய வருமானவரி விவரக் கணக்குகள் மீது அண்மைக்கால வருமானவரி மதிப்பீடு (Income Tax Assesment Order) ஆணையைத் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படலாம். IV, V, வகையைப் பொறுத்த வரை, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியிலிருந்துவேண்டிய வங்கி உத்திரவாதத்தை தாக்கல் செய்யுமாறு விண்ணப்பதாரர் கேட்டுக்கொள்ளப்படலாம். | அனைத்து வகுப்பு ஒப்பந்தக்காரர்களும் அவர்களது வருமான வரி குறித்த தற்போதைய வருமானவரி மதிப்பீடு ஆணையை அளித்திட வேண்டும். | " |
| | ii)பதிவு செய்ய விழையும் ஒரு நிறுவனம் அல்லது கூட்டு (Corporate Firm) நிறுவனத்தைப் பொறுத்தவரையில் ஆண்டறிக்கையின் (Auditor's Annual Report) அண்மைக்கால நகல் ஒன்றை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| | iii) விண்ணப்பதாரர்கள் அனைவரும் அவரவர் விற்பனை வரி பதிவு சான்றிதழை அளிக்குமாறும் விண்ணப்பதாரரின் தொழில்நுட்பத் தகுதியினைப் பற்றிய அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்வதற்காக பொதுப்பணித்துறை விதிக் கோவையில் வரையறுக்கப்பட்டவாறு முழு விவரங்களையும் விண்ணப்பதாரர் கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 6. | ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வது இரண்டு நிலைகளில் செய்யப்பட வேண்டும். ஒன்று, வகைகள் IV, V, ஆகியவை பொறுத்தமட்டில், செயற்பொறியாளர் நிலையிலும், மற்றொன்று, வகைகள் I, II, III ஆகியவை கண்காணிப்புப் பொறியாளர் நிலையிலும், ஒவ்வொரு நிலையிலுமான பதிவை, மூன்று அதிகாரிகள் அடங்கிய குழு முடிவு செய்ய வேண்டும். கண்காணிப்புப் பொறியாளர் செய்யும் பதிவு, தலைமைப் பொறியாளருக்கு தெரிவிக்கப்படவேண்டும். அவர், பதிவு | தற்போது நடைமுறையில் உள்ளவாறு வகுப்பு ஐந்துக்கான ஒப்பந்தக்காரர் பதிவினை செயற்பொறியாளர் செய்வது தொடரலாம். மற்ற வகுப்புக்கான பதிவுகளை கண்காணிப்புப் பொறியாளர்கள் செய்யலாம். ஒப்பந்தக்காரர் பதிவிற்காக குழு அமைக்கத் தேவையில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | பெற்ற ஒப்பந்தக்காரர்கள் | | |
| 7. | அனைவரின் மாநிலப் பட்டியல் ஒன்றை தயாரித்து துறைகள்/நிறுவனங்கள் அனைத்திற்கும் அனுப்பிவைப்பார். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 8. | மாநிலப்பட்டியலை தலைமைப் பொறியாளர் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் ஆய்வு செய்ய வேண்டும். யாதொரு துறைநிறுவனத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள். யாதொரு ஒப்பந்த நடைமுறையில் பங்கு கொள்ளாமல் இருக்கும் ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள், அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டும். | கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒப்பந்த நடைமுறையில் பங்குபெறாமல் இருக்கும் ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் பதிவினின்று தானாகவே நீக்கம் செய்யப்படும் என்றும், இதனை ஒப்பந்தக்காரர்களுக்கான பதிவு ஆணையிலேயே குறிப்பிட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், ஒப்பந்தக்காரர்கள் தொடர்ந்து மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி பட்டியல் பெற்றும், ஒப்பந்தப்புள்ளி அளிக்காவிடில் அவர்களது பெயர் ஒப்பந்தக்காரர் பதிவினின்று நீக்கப்பட வேண்டும் என்றும், இதனை ஒப்பந்தப்பதிவு ஆணையிலேயே குறிப்பிட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. | " |
| 9 | கட்டண வீத அட்டவணையைத் (Schedule of Rates) தயாரிப்பதற்கு, பொதுப்பணித்துறை தலைமை அலுவலகத்தில் கண்காணிப்புப் பொறியாளர் அல்லது முதுநிலை செயற்பொறியாளர் ஒருவரின் தலைமையில் தனிப்பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். புள்ளியியல் துறை, மண்ணியல்–காங்கவியல் துறை, தொழிலாளர் நலத்துறை ஆகிய ஒவ்வொரு துறையிலிருந்தும் ஓர் அதிகாரியை இந்தத் தனிப்பிரிவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இம்முறையில் நேர்மையை நிலை நாட்டுவதற்கு வெளி அங்காடியிலிருந்து வரும் கட்டண வீதங்களுக்கேற்ப இருக்கும் வகையில், கட்டண வீத அட்டவணையை நாளது வரையிலானதாகப் பராமரிப்பது மிகவும் அவசியமாகும். | பொதுப்பணித்துறை தலைமை அலுவலகத்தில் தனிப்பிரிவு ஏதும் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், தொழிலாளர் நலத்துறை, மண்ணியல் மற்றும் காங்கவியல் துறை அலுவலர்களையும் மற்றும் நிதித்துறையிலிருந்து கணக்கு அறிவுடன் உள்ள ஒருவரையும் இணைத்து கட்டண வீத அட்டவணையை தயாரிக்கலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்ட வகையில் பரிந்துரையை நடைமுறைப்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 10. | பொதுப்பணித் துறை தலைமை அலுவலகத்தில் விழிப்புப் பணிக்குப் பொறுப்பு வகிக்கும் கண்காணிப்புப் பொறியாளரின் நிருவாக ஆய்வு வரம்பிற்குள் இந்த தனிப்பிரிவு செயல்பட வேண்டும். | சிறப்புக்குழு ஏதும் அமைக்கத் தேவையில்லை. ஆதலால் இப்பரிந்துரை பொருந்தாது. | பரிந்துரை ஏற்கப்படாததால் ஆணையேதும் வெளியிடப்படவில்லை. |
| 11. | பொதுப் பொறியியல் பணிகள் அனைத்திற்கும் கட்டண வீத அட்டவணையைத் தயாரித்து பராமரிப்பதற்குப் பொதுப்பணித்துறை பொறுப்பு வகிக்கையில் அரசுத் துறைகள், பொதுத் துறைகள் தங்களது விசேடப் பொறியியல் தேவைகளுக்கு அவசியமான நவீன சாதனங்கள் அல்லது தொழில் நுட்பத்தை பயன்படுத்திக்கொள்ள சிறப்புக் கட்டண வீத அட்டவணையை (Special Schedule of Rates) சொந்தமாகத் தயாரிக்கலாம். அவ்வாறு சிறப்பு கட்டண வீத அட்டவணையைத் தயாரித்து, அதனை நாளதுவரையில் பராமரித்து வரும் பணியைச் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | சம்பந்தப்பட்ட துறையின்/நிறுவனத்தின் தலைமை விழிப்புப்பணி அதிகாரியின் நிருவாக ஆய்வு வரம்பின் கீழ் வரும் தனிப்பிரிவு ஒன்று கவனித்துக்கொள்ள வேண்டும். | | |
| 12. | எதிர்பாராத இனங்களுக்கு மதிப்பீட்டில் கூடுதலாக ஐந்து சதவீதம் வழங்கப்படும் தற்போதைய நடைமுறை நிறுத்தப்படலாம். சிறு அளவிலான மேற்பார்வை மற்றும் சில்லறைச் செலவுக்காக ஐந்து சதவீதம் ஒதுக்கும் தற்போதைய மற்றொரு நடைமுறையை சில்லறைச் செலவுக்கு மட்டும் என்று 2.5 சதவீதமாகக் குறைக்கலாம். | எதிர்பாராத இனங்கள் மற்றும் சிறு அளவிலான மேற்பார்வை மற்றும் சில்லறைச் செலவு ஆகியவைகளுக்கான மதிப்பீட்டில் தலா 2.5 சதவீதம் அனுமதிக்கலாம். | உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 13. | ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அறிவிப்பில் அப்பணிகளுக்கு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ள விவரக் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 14. | விதிவிலக்காக குறிப்பிட்ட பணிகள் தவிர அனைத்துப் பணிகளும் பகிரங்க ஒப்பந்தப்புள்ளி நடைமுறையை பின்பற்றி வழங்கப்பட வேண்டும். அவை பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.<br><br>i) நடைமுறை வெளிப்படையானதாக இருத்தல்.<br>ii) இயன்ற அளவு பலர் ஒப்பந்தப்புள்ளி அளிக்கக்கூடிய வகையில் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பை போதிய அளவு விளம்பரம் செய்தல்.<br>iii) பொது நலனைக் கருத்திற் கொண்டு, பெரிதும் அனுகூலமாகக் கூடிய கட்டண வீதத்திலான ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்ளுதல்.<br>iv) தெரிந்த நபர்களுக்கு ஆதரவு காட்டும் வகையில் விருப்புரிமை அதிகாரத்தை தன்னிச்சையாக மேற்கொள்ள வாய்ப்பளிக்கும் சூழ்நிலைகளைத் தவிர்த்தல். | <br><br>ஏற்றுக் கொள்ளப்பட்டது.<br>ஏற்றுக் கொள்ளப்பட்டது.<br>ஏற்றுக் கொள்ளப்பட்டது.<br>ஏற்றுக் கொள்ளப்பட்டது. | <br><br>"<br>"<br>"<br>" |
| 15. | ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பு குறித்து தமிழ் மற்றும் ஆங்கில முன்னணி பத்திரிகைகளிலும், மாவட்ட அலுவலகங்களிலுமுள்ள அறிவிப்புப் பலகைகளிலும் பெரிய அளவில் விளம்பரம் செய்ய வேண்டும். | ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பை அரசின் வெளியீடான தமிழரசு பத்திரிகையில் விளம்பரம் செய்யத் தேவையில்லை. மற்றப் பரிந்துரைகள் ஏற்றுக் | ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு பரிந்துரைகளை செயல்படுத்த உரிய ஆணைகள் |

| | | | |
|---|---|---|---|
| | ரூ.10 இலட்சத்திற்கும் கூடுதலான மதிப்புடைய பணிகளைப் பொறுத்த வரையில், ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பை அரசின் வெளியீடான "தமிழரசு" பத்திரிகையில் விளம்பரம் செய்ய வேண்டும். | கொள்ளப்பட்டன. மேலும் ரூ.50 இலட்சத்திற்கு மேலான வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை ஒப்பந்தப்புள்ளி கோரும் துறையினர் குறிப்பிடும் நாளிதழ்களில் செய்தி மற்றும் தகவல் தொடர்பு இயக்குநர் விளம்பரம் செய்திட வேண்டும். ரூ.50 இலட்சத்திற்கு குறைவான ஒப்பந்தங்கள் குறித்த விளம்பரங்களை குறித்து செய்தி மற்றும் தகவல் தொடர்பு இயக்குநரே முடிவு செய்யலாம். மேலும், ரூ.50 இலட்சத்திற்கு மேலான வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் துறையினர் குறிப்பிடும் விளம்பர அறிவிப்புகளைவிட கூடுதலாகவோ, அல்லது குறிப்பிடாத நாளிதழ்களிலோ விளம்பரம் செய்யக்கூடாது. | வெளியிடப்பட்டுள்ளன. |
| 16. | ஒவ்வொரு மாவட்டத்திலும் அலுவல் முறையில் வெளியிடப்படும் முறையான செய்தி அறிக்கை ஒன்றின் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அனைத்து அறிவிப்புகளை முறையாகவும், மிகவும் பயனுள்ள வகையிலும் வெயியிடலாம். வரையறுக்கப்பட்ட மிகப்பெரிய அளவிலான பணிகள் தொடர்பான ஒப்பந்தப்புள்ளிகளை கோரும் அறிவிப்புகள் குறித்து விவரங்களை மாநில தலைமை இடத்தில் இத்தகைய அலுவல் முறையிலான வெளியீடுகளில் வெளியிடப்படலாம். இத்தகைய விளம்பரங்களை வெளியிடும் பொறுப்பினை, இதற்கென்று தனியாக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் மீது நிர்ணயிக்கலாம். மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் விளம்பர வெளியீடுகளில் சேர்ப்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அனைத்து அதிகாரிகளும், (Tender Inviting Authorities) இதற்கென்று தனியாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பின் நகல்களைக் கொடுப்பதற்கு கடமைப்பட்டவராவார்கள். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 17. | பதிவு செய்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்ததாரும், ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்புக்குப் பதிலளிப்பதற்கும், ஒப்பந்தப்புள்ளி குறித்த அட்டவணைத் தாள்களைக் கேட்பதற்கும் உரிமை உடையவராவார். ஒப்பந்தப்புள்ளி அட்டவணைகளின் நகல்கள் வட்ட அலுவலகங்களில்/வளர்ச்சி வட்டார அலுவலகங்களில்/மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் விற்பனைக்குக் கிடைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் ஒப்பந்தப்புள்ளி அனுப்ப விரும்பும் ஒப்பந்ததாரர்கள் அவற்றை எளிதாகப் பெறலாம். | ஒப்பந்தப்புள்ளித் கோரும் அலுவலகத்தின் எல்லைக்குட்பட்ட வட்டாட்சியர்/வட்டார வளர்ச்சி மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புக் கடிதம் தகவலுக்கு வைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஒப்பந்தம் கோரும் அலுவலகத்திலேயே ஒப்பந்தப்புள்ளி பட்டியல் விற்பனை செய்யும் முறை தொடரலாம். கணினிகள் பயன்படுத்தும் நிலையில் E-Mail வசதிகள் மூலம் தகவல்கள் தரப்படலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்ட வகையில் பரிந்துரையை செயல்படுத்த உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 18. | ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பு வெளியிடப்படும் நாளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகளைத் திறக்கும் நாளுக்கும் இடையே போதிய கால அவகாசம் அளிக்கப்பட வேண்டும். இக்கால அளவு, ரூ.15 இலட்சம் வரையிலான மதிப்புடைய பணிகளுக்கு 15 நாட்களுக்கு குறையாமலும், ரூ.25 இலட்சம் வரை மதிப்புள்ள பணிகளுக்கு 3 வாரங்களுக்கு குறையாமலும், பெரும் பணிகளுக்கு அல்லது சிறப்புத் தன்மை வாய்ந்த பணிகளுக்கு குறைந்தது 4 வார கால அளவாகவும் இருக்க வேண்டும். | ரூ.2 கோடி வரையிலான ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளுக்கும் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாளுக்கும் 15 நாட்கள் இடைவெளி இருக்க வேண்டும். ரூ.2 கோடிக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு 30 நாட்கள் இடைவெளி இருக்க வேண்டும். | " |
| 19. | ஒப்பந்தப்புள்ளிகளைத் திறந்து அவற்றை மதிப்பீடு செய்யும் பணியை தனி நபர் ஒருவரிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக, மூன்று அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றிடம் ஒப்படைக்க வேண்டும். இக்குழுவை ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு (Tender Scrutinising Committee) என்று அழைக்கலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 20. | ஏதேனும் ஒரு காரணத்திற்காக ஒப்பந்தப்புள்ளியைத் திறந்து மதிப்பீடு செய்யும் நாளைத் தள்ளி வைக்கும் போதெல்லாம், அவ்வாறு ஒப்பந்தப்புள்ளிகள் திறந்து மதிப்பீடு செய்வது தள்ளி வைப்பது குறித்து முதற்கண் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பைப் போன்றே, சம அளவில் விளம்பரம் செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 21. | கட்டண வீத அட்டவணைக்கு உட்பட்ட அனைத் வகையான பணிகளிலும் ரூ.20 இலட்சம் வரையில் மதிப்புடைய பணிகளுக்கு சதவீத அடிப்படையிலான கட்டண வீத ஒப்பந்தப்புள்ளி முறை பின்பற்றப்படலாம். | சதவீத அடிப்படையிலான கட்டண வீத ஒப்பந்தப்புள்ளி முறை பின்பற்றப்படலாம். இதற்கான பணவரம்பு உரிய துறையினால் முடிவு செய்துக் கொள்ளப்படலாம். | உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 22. | ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு, நடப்பு கட்டண வீத அட்டவணைக்கு இணங்கவும், அட்டவணைக்கு அப்பாற்பட்ட இனங்களைப் பொறுத்த வரையில நிலவும் அங்காடி கட்டண வீதத்திற்கு இணங்கவும், அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் மதிப்பீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 23. | ஒப்பந்தப்புள்ளிதாரருக்குப் பணியை வழங்க முடிவு செய்யும் அதிகாரம், தற்போது தனிப்பட்ட அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ளதற்குப் பதிலாக, மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். இதை ஒப்பந்தம் ஏற்புக்குழு (Tender Award Committee) என்று அழைக்கலாம். | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்த ஆய்வுக்குழு ஆய்வு செய்யப் போவதால், ஒப்பந்தம் வழங்க வேறொரு குழு தேவையில்லை. ஏற்கனவே உள்ள நடைமுறை தொடரலாம். | ஏற்கனவே உள்ள முறையே தொடரலாம் என்பதால் ஆணைகள் ஏதும் தேவையில்லை. |
| 24. | மதிப்பீடு செய்யப்பட்ட பணிகளின் மதிப்பு ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்டிருக்கும் இனங்களில் ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழு தலைமைப் பொறியாளர் ஒருவரையும், நிதித்துறை அரசு இணைச் செயலர் ஒருவரையும் கொண்டிருக்க வேண்டும். இவ்வகையைச் சேர்ந்த | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தற்போதைய நடைமுறை திருப்திகரமாக செயல்படுகிறது. மேலும் உத்தேசிக்கப்பட்ட குழு அமைக்கப்பட்டால் காலதாமதம் ஏற்படும். எனவே தற்போதுள்ள | தற்போதுள்ள நடைமுறையே தொடரலாம் என்பதால் புதிதாக ஆணை தேவைப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட ஒரு பணி மிகவும் சிக்கலான பொறியியல் வடிவமைப்புகள் சம்பந்தப்பட்டதாக இருந்தால், இதே பணியைக் கவனிக்கும் பொதுத்துறை அல்லது தனியார் துறை நிறுவனத்தைச் சேர்ந்த மூத்த தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரை இக்குழுவில் ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளலாம், | நடைமுறை தொடரலாம். | |
| 25. | சாதாரணமாக, ஒரு பணியை, குறைந்த கட்டண வீதங்களைக் குறிப்பிட்டிருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாருக்கே அளிக்க வேண்டும். ஆனால், ஒப்பந்தப்புள்ளியை கோரும் அதிகாரி, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் சில சிறப்புத் தொழில்நுட்பத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தால், அத்தகைய தொழில்நுட்ப தேவைகள் தொடர்பான கூறுகளை அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாருக்கு அப்பணியை வழங்க வேண்டும். ஆனால், இத்தகைய சிறப்புக் கூறுகள், தொகை அடிப்படையில் அளவிடக் கூடியதாகவும் விவரிக்கத் தக்கவையாகவும் இருக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | பரிந்துரையை செயல்படுத்த உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 26. | ஒப்பந்தத்தை வழங்க முடிவு செய்வதற்கு முன் குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டண வீதங்கள் கட்டுப்படியானவையா என்பதையும் ஒப்பந்தத்தை ஏற்கும் குழு மதிப்பிட வேண்டும். | ஒப்பந்தம் வழங்கும் அதிகாரி ஒப்பந்தப்புள்ளியில் அளிக்கப்பட்டுள்ள விலை வீதங்கள் கட்டுப்படியானவையா என்று ஒப்பந்தப்புள்ளி ஏற்பிற்கு முன் ஆய்வு செய்ய வேண்டும். | " |
| 27. | ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு அதன் மதிப்பீடும் பரிந்துரைகளும் நியாயமானவையே எனத் தெரிவிக்க போதிய விவரங்களுடன் காரணங்களைப் பதிவு செய்ய வேண்டும். அது போலவே, ஒப்பந்தத்தை வழங்கும் குழு, இறுதியாகப் பணியை வழங்கியதற்கான காரணங்களை விவரமாகப் பதிவு செய்ய வேண்டும். | ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழுவிற்கு பதிலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கும் அதிகாரி இதனை கடைபிடிக்க வேண்டும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 28. | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள், ஒரே அளவில் குறைந்த விலையைக் குறிப்பிட்டிருந்தால், ஒரே அளவில் விலையைக் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிதார்களுக்கு அந்த ஒப்பந்தப்புள்ளியை, ஒப்பந்தம் வழங்கும் குழு, பிரித்துக் கொடுக்க வேண்டும். அவ்வாறு ஒப்பந்தப்புள்ளியைப் பிரித்துக் கொடுக்க இயலாத போது, முடிவாக ஒப்பந்தம் வழங்கப்பட்டதற்கான காரணங்களை குழு பதிவு செய்ய வேண்டும். | ஒப்பந்தப்புள்ளி வழங்கும் குழுவிற்கு பதிலாக ஒப்பந்தப்புள்ளி வழங்கும் அதிகாரி இதனை கடைபிடிக்க வேண்டும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்பட்ட வகையில் பரிந்துரையை செயலாக்க உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 29. | தண்ணீரைச் சுத்திகரிக்கும் தளவாடத்தை நிறுவுதல், வளைவு அணைகளைக் கட்டுதல், விளையாட்டு அரங்கங்கள் கட்டுதல் போன்ற சிறப்புப் பணிகளைப் பொறுத்த வரையில் தற்போது பின்பற்றப்பட்டு வரும் இரட்டை உறைமுறை அதாவது முதல் உறையில் ஒப்புத்தாரரின் தொழில் தகுதி சம்பந்தப்பட்ட தொழில்நுட்பத்தில் அவருக்கு இருக்கும் | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | அறிவாற்றல் போன்ற விவரங்களை அளிப்பது, இரண்டாம் உறையில் செலவு (Financial) அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி பற்றிய விவரங்களை அளிப்பது என்னும் இரட்டை உறைமுறை தொடர்ந்து இருக்கலாம். இந்த முறையில், ஒப்பந்தப்புள்ளிகளை, ஆய்வு செய்யும் குழு முதற்கண் அவருடைய தொழில்நுட்பத்திற்கிணங்க அவர்களின் தகுதியை வரிசைப்படுத்திப் பட்டியலிட வேண்டும். இரண்டாம் உறையிலுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழு செலவைத் தனியாக மதிப்பீடு செய்யவேண்டும். பின் பணிச் செலவுக்கு இணங்க, முன்னுரிமை அடிப்படையில் அவற்றை வரிசைப்படுத்தி பட்டியலிட வேண்டும். ஒப்பந்தம் வழங்கும் குழு இரு பட்டியல்களையும் சேர்த்து கவனமுடன் பரிசீலனை செய்து, பொது நலனைக் கருத்திற்கொண்டு, ஒருமுறம் ஒப்பந்தப்புள்ளி செலவையும் மறுபுறம் தொழில்நுட்பத் தகுதியையும் சீர்தூக்கிப்பார்த்து எந்த ஒப்பந்ததாரர் அளித்த விலைப்புள்ளி வீதம் மிகவும் அனுகூலமாக இருப்பதாக தெரிய வருகிறதோ, அந்த அனுகூலமுடைய விலைப்புள்ளியைக் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுக்க வேண்டும். | | |
| 30. | ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழு மற்றும் ஒப்பந்தம் ஏற்புக்குழு ஆகியவற்றின் நடைமுறைகள் சீரிய நோக்கத்தையும், பொது நலனில் அக்கறையையும் இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும். இக்குழுக்களின் முடிவுகள், பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டும். இக்குழுவைச் சேர்ந்த எந்த உறுப்பினருக்கும் அவருடைய மறுப்புக் குறிப்பினைப் பதிவு செய்வதற்கு உரிமை உண்டு. அவ்வாறான மறுப்புக் குறிப்பு, நடவடிக்கைக் குறிப்பு பதிவின் ஒரு பகுதியாகவே கொள்ளப்படும். | ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக்குழுவினைப் பொறுத்தவரையிலான பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்பட்ட வகையில் பரிந்துரையை செயலாக்க உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 31. | கீழ்நிலையிலிருந்து மேல்நிலை வரையில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சுற்றிச் சுற்றி வருவதைக் குறைப்பதற்கும், ஒப்பந்தம் வழங்குவது பற்றி முடிவு எடுப்பதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும் துறைத் தலைவர்கள், நிறுவனங்களின் தலைவர்கள், அவர்களுடைய அலுவலகங்களில் பின்பற்றப்படும் செயல்பாட்டு நடைமுறையைப் பரிசீலனை செய்து அவற்றைத் தகுந்தவாறு மாற்றியமைக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 32. | ஒப்பந்தம் வழங்கும் குழு, ஒப்பந்தத்தை வழங்க முடிவு செய்தபிறகு, ஒப்பந்தம் வழங்கப்பட்டதற்கான காரணங்களுடன் அம்முடிவினை ஒப்பந்தப்புள்ளி அளித்த அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் ஒப்பந்தம் வழங்கும் குழு என்பதற்கு பதிலாக ஒப்பந்தம் வழங்கும் அதிகாரி என்றிருக்க வேண்டும். | " |
| 33. | மேலே குறிப்பிட்ட முறையில், அனைத்து வகையான ஒப்பந்தப் | ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தற்போது நடைமுறையில் | தற்போதுள்ள நடைமுறையே |

| | | | |
|---|---|---|---|
| | புள்ளிகளும் ஆய்வு செய்யப்பட்டு, அவை சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் வழங்கும் குழுக்களால் அனைத்து வகையான ஒப்பந்தகளும் முடிவு செய்யலாம். இந்த முறையில் எந்த ஒரு ஒப்பந்தத்தையும் வழங்குவதற்கு அரசு அளவில் முடிவு எடுப்பதற்கு அதை அரசுக்கு அனுப்பிவைக்க வேண்டிய அவசியம் இல்லை. | உள்ள அதிகார வரம்பு முறை தொடரலாம். | தொடரலாம் என முடிவெடுத்துள்ளதால் புதிதாக ஆணைகள் ஏதும் தேவைப்படவில்லை. |
| 34. | பின்வருபவை நீங்கலாக, அனைத்துப் பொறியியல் பணிகளைப் பொறுத்தவரையில், மேலே விவரித்துக் கூறப்பட்டுள்ளவாறு, பகிரங்க ஒப்பந்தப்புள்ளி நடைமுறையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.<br><br>1) இயற்கைச் சீற்றங்களின் போதும், அவசர நிலைகளிலும், அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசால் அறிவிக்கப்படும் பணிகள். ஒரு பணியை அவசரப்பணியாக அறிவிக்கும் அதிகாரங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தலைமைப் பொறியாளருக்கும் வழங்கப்படலாம்.<br>2) அரசால் வரையறுக்கப்பட்ட சில நிதி வரையறைக்குக் கீழுள்ள குறைந்த மதிப்புள்ள பணிகள்.<br>குறிப்பிட்ட ஒரு ஒப்பந்ததாரிடம் மட்டுமே இருக்கின்ற நவீன தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட பணிகள், அப்பணிகள் செம்மையாகச் செய்யப்பட வேண்டுமானால், அவரிடமே வழங்கப்பட வேண்டிய பணிகள் எந்த ஒரு குறிப்பிட்ட பணி இவ்வகையின் கீழ் வருகிறதா என்பது குறித்து 2 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மூன்று வல்லுநர்களைக் கொண்ட குழு முடிவு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது.<br><br>ஏற்றுக் கொள்ளப்பட்டது.<br><br>ஏற்றுக் கொள்ளப்பட்டது. | பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.<br><br>"<br><br>"<br><br>" |
| 35. | மேலே (1) ஆம் இனத்தில் குறிப்பிட்டுள்ள வகையைச் சேர்ந்த அவசரப்பணிகளை பொறுத்தவரையில், அப்பணியைச் செம்மையாக விரைவில் செயல்படுத்துவதற்கு ஒப்பந்ததாரரின் பின்னணி, அனுபவம், தகுதி, நம்பகத்தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு பதிவு செய்யப்பட்ட பட்டியலிலுள்ள நியமன ஒப்பந்ததாரர்களிடம் அப்பணி ஒப்படைக்கப்படலாம். எனினும் கோட்டப் பொறியாளர்/கண்காணிப்புப் பொறியாளர்/தலைமைப் பொறியாளர் நிலையில் சாதாரணமாக, எந்த அளவிற்கு நிதி வரையறை உள்ளதோ, அந்த அளவில் நான்கில் ஒரு பங்கு அளவிற்கு மட்டுமே அவசரப் பணிகளுக்கு நிதி வரையறையை அனுமதிக்கலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 36. | ரூ.10 இலட்சத்திற்குக் கூடுதலான மதிப்புடைய பணி ஆணைகளின் நகல்கள், ஒரே சமயத்தில் ஊழல் தடுப்புக் கண்காணிப்பு இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவர் அந்த இயக்குகத்தில் உள்ள சட்டப்படி ஏற்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க ஒழுக்கம் கண்காணிப்புப்பணி நோக்கில் பணி நிறைவேற்றப்படுவதை கண்காணிக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 37. | சிமிட்டி, உருக்கு, பிவிசி குழாய்கள், ஜிஐ குழாய்கள் முதலியவற்றை துறை அளவில் கொள்முதல் செய்து, அவற்றை ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கி வரும் தற்போதைய நடைமுறையைத் தொடரலாம். கோட்டப் பொறியாளர் அல்லது கண்காணிப்புப் பொறியாளர் தேவைப்பட்ட பொருட்களின் அளவை, காலாண்டுக்கு ஒரு முறை நுணுக்கமாக கண்காணிக்க வேண்டும். அப்போது தான் பொருட்களை வாங்கி வழங்குவதன் காரணமாக அரசு பணம் தேவையில்லாமல் பெரும் அளவில் முடக்கப்படாது, குறைந்த அளவிலேயே இருக்குமாறு பார்த்துக்கொள்ள முடியும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | " |
| 38. | பணியிடத்திலிருந்து சிறிது தொலைவில் அமைந்திருக்கும் கல் வெட்டியெடுக்கும் இடத்திலிருந்து எடுத்து வரப்படும் பொருட்களைப் பயன்படுத்துவது சம்பந்தப்பட்ட பணிகளை பொருத்தவரையில், உள்ளூர் வருவாய் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டவாறு, பணியிடத்திற்கு அருகில் இருக்கும் கல் வெட்டியெடுக்கும் இடத்தை ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் தற்போது முடிவு செய்யப்பட்ட நடைமுறைவாறு கட்டண வீத அட்டணையை நிர்ணயம் செய்யும்போது மண்ணியல் மற்றும் சுரங்கவியல் துறை அலுவலரை ஈடுபடுத்தும்போது கல்வெட்டி எடுக்கும் இடத்தினை முடிவு செய்யலாம் என்பதினை செயல்படுத்தலாம். மேலும், மண்ணியல் துறையின் உதவி இயக்குநர் அந்த மாவட்டத்தில் இருக்கும் அனைத்து கல்வெட்டி எடுக்கும் இடத்தினை அதற்கான வரைபடத்துடன் ஆண்டுக்கொருமுறை வெளியிட வேண்டும். | தற்போது முடிவு செய்யப்பட்ட நடைமுறையை கடைபிடிக்க உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. |
| 39. | பணியை முடிப்பதற்கு வரையறுக்கப்பட்ட கால அளவு 24 மாதங்களும் அதற்கு மேற்பட்டும் இருக்கும் நோ்வில் விலை ஏற்றத்திற்கு வகை செய்யும் பகுதி ஒன்றை ஒப்பந்த உடன்பாட்டில் சோ்க்கலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. விலையை சரிக்கட்டும் சரத்தினை 18 மாதங்களுக்கு மேற்படும் அனைத்து ஒப்பந்தங்களிலும் சோ்க்கலாம். | ஏற்றுக் கொண்டவாறு பரிந்துரையை செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 40. | பணிகளை மேற்கொள்ளும்போது, உள்ளூர் நிலைமைகளுக்கும், மாறுபட்ட தேவைகளுக்கும் இணங்க சில நேரங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. மாற்றங்களைச் செய்வதற்கு தற்போது | ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புடைய மாற்றங்களுக்கு சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் ஒப்புதல் அளிக்கலாம். | |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கும் நடைமுறை தொடர்ந்து இருக்கலாம். ஆனால், ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புடைய அனைத்துப் பணிகளிலும் திட்டப்பணி மாற்றங்கள் குறித்த இனங்களின் செலவில் உள்ள வேறுபாடு குறித்து பொதுப்பணித்துறை தலைமை அலுவலகத்திலுள்ள தனிப்பிரிவு மூலம் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். | | " |
| 41. | இட ஆணைப் புத்தகம் (Site Order Book) தொடர்பான நிலை ஆணைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு, களப்பணி அலுவலர்கள் அவற்றைக் கண்டிப்பாகப் பின்பற்றும் வகையில், அவற்றை மீண்டும் வெளியிட வேண்டும். முக்கியமான இப்பதிவேட்டின் நம்பகத்தன்மையைப் பாதுகாக்க, வரிசையாக்கப்பட்ட நெடும் பத்திகளுடன் எண்கள் அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டு, போதிய எண்ணிக்கையில் இப்புத்தகங்கள் அச்சிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | பரிந்துரைக்கேற்ப உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 42. | ரூ.5 இலட்சம் மதிப்புடைய பணிகளைப் பொறுத்தவரையில் கோட்டப் பொறியாளரும், ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.25 இலட்சம் வரையில் மதிப்புள்ள பணிகளைப் பொறுத்தவரையில் கண்காணிப்புப் பொறியாளரும், ரூ.25 இலட்சத்திற்கு மேல மதிப்புடைய பணிகளைப் பொறுத்தவரையில் தலைமைப் பொறியாளரும் அளித்த கட்டுமானம் நல்ல நிலையில் உள்ளது என்று கூறும் சான்றிதழ் இல்லாது, பணிகளுக்கான இறுதித் தொகை பட்டியலுக்குத் தொகை வழங்கக் கூடாது. | தொழில் நுட்பத்துறைகளில் ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட வேலைகளுக்கு, இவ்வேலை ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகளுக்கு ஏற்றவாறு உள்ளன என்றும் குறிப்பிடத்தக்க குறைகள் இன்றி பணிகள் உள்ளன என்றும் கண்காணிப்புப் பொறியாளர்களால் தற்போது சான்று வழங்கப்படுகிறது. இதனுடன் கட்டுமான உறுதிச் சான்றிதழும் கண்காணிப்புப் பொறியாளரால் அளிக்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தலைமைப் பொறியாளர்களுக்கு பலதரப்பட்ட உயர்மட்ட செயல்பாடுகளை கவனிக்கும் பொறுப்புகள் உள்ளதால், மேற்குறித்த சான்றிதழ் வழங்கும் பணி அவருக்குத் தேவையில்லை என்று முடிவு செய்யப்படுகிறது. 10 லட்சம் ரூபாய் வரை உள்ள பணிகளுக்கு செயற்பொறியாளர் சான்றளிக்கலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்ட வகையில் பரிந்துரையை செயல்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 43. | ஒப்பந்தக்காரர்களின் இரகசியப் பதிவேடு (Confidential Register of Contractors) தொடர்பான அனைத்து உத்தரவுகளையும் தற்போது ஒன்று தொகுத்து அவற்றைக் கள அதிகாரிகள் கண்டிப்பாக பின்பற்றுவதற்காக மீண்டும் அவற்றை வெளியிட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 44. | 1) ஒப்பந்தக்காரர்களுடன் மத்தியஸ்தம் (Arbitration) கொள்ளப்படுவதற்காக, ஒப்பந்தங்களின் பகுதி, பின்வருவனவற்றை உள்ளடக்கும் வகையில் விளக்கமாக இருக்க வேண்டும்.நடுவராக (Arbitrator) அறிவிக்கப்பட்ட அதிகாரி, நேர்மையான | மந்தணக்கோப்பில் முராணான குறிப்பு எதுவும் இல்லாத உரிய அனுபவம் வாய்ந்த பொறியாளரை நடுவராக நியமிக்கலாம் என்று முடிவு செய்யப்படுகிறது. | ஏற்றுக் கொண்டவாறு பரிந்துரையை செயல்படுத்த ஆணைகள் |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | முதுநிலை பொறியாளராக இருக்க வேண்டும்.<br>2) தீர்ப்புக்கான காரணங்கள் எழுத்து மூலமாக விவரிக்கப்பட்டு இருந்தால்தான், தீர்ப்பு ஏற்கத்தக்கதாகும் என்று அப்பகுதியில் தெளிவுபடுத்தப்பட வேண்டும். மறைமுகமான ஒரு வரி தீர்ப்புகள் ஏற்கப்படத்தக்கதல்ல. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | வெளியிடப்பட்டுள்ளன. |
| | ஒப்பந்தக்காரர் பணியை முடித்தபிறகு மூன்று மாதங்களுக்குள் தகாரறுகள், கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட தொகை ஆகியவற்றைக் குறிப்பிட்டு பொறியாளர்களுக்கு எழுத வேண்டும் என்றும், அவ்வாறு செய்யத் தவறினால், ஒப்பந்தக்காரர் நடுவர் மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யமாட்டார் என்று கருதப்படும் என்றும் இப்பகுதியில் தெளிவுபடுத்த வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 45. | வருங்காலத்தில், SAS தேர்வில் தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் மட்டுமே கோட்டக் கணக்கர்களாக நியமிக்கப்படுவதற்குக் கருதிப் பார்க்கப்படுவர். SAS தேர்வில் தேர்ச்சி பெறாமல் கோட்டக் கணக்கர் பதவியில் தற்போதுள்ள பணியாளர்கள் மூன்று ஆண்டு கால அளவிற்குள் இத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யத் தவறினால், கோட்டக் கணக்கர் பதவியிலிருந்து எடுக்கப்படுவர். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 46. | முக்கிய கட்டுமானப் பணிகள் தொடர்பான அனைத்து தொழில் நுட்ப விஷயங்கள் குறித்து ஒட்டு மொத்தமாக கண்காணிக்க விழிப்புப்பணி ஆணையத்தின் கீழ் நேரடியாக பணிபுரிய உயர்நிலைத் தொழில்நுட்பக் குழு ஒன்று அமைக்கப்படலாம். இக்குழுவிற்குத் தலைமைப் பொறியாளர் பதவித் தரத்திலுள்ள அதிகாரி ஒருவர் தலைவராக இருக்கலாம். இவருடைய சார்நிலைப் பணியாளர்கள், கணக்கு மற்றும் பொறியியல் பிரிவுகளிலிருந்து நியமிக்கப்படுவர். பெரும் கட்டுமானப் பணிகளைப் பொறுத்தமட்டில் விழிப்புப் பணி ஆணையத்திற்கு வரப்பெறும் பாதகமான தகவல் அல்லது இயல்பான நடைமுறையில் குறை தணிக்கையில் வெளிவரும் பாதகமான பொருள்களைப் பற்றி தொழில்நுட்ப தணிக்கை, செய்வது இக்குழுவின் பொறுப்பாகும். | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதற்கு மாறாக கண்காணிப்புப் பொறியாளர் ஒருவரை தலைமையாகக் கொண்டு விழிப்புப் பணிக்குழு ஒன்றினை நீர்வள ஆதார அமைப்பின் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் உருவாக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. | ஏற்கப்படவில்லை. எனினும் எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. |
| | செய்தி மற்றும் சுற்றுலாத் துறை | | |
| 15. | ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பு குறித்து தமிழ் மற்றும் ஆங்கில முன்னணி பத்திரிகைகளிலும், மாவட்ட அலுவலகங்களிலுமுள்ள அறிவிப்பு பலகைகளிலும் பெரிய அளவில் விளம்பரம் செய்யவேண்டும். ரூ.10 இலட்சத்திற்கும் கூடுதலான மதிப்புடைய பணிகளைப் பொறுத்த வரையில், ஒப்பந்தப்புள்ளிகளைக் கோரும் அறிவிப்பை அரசின் வெளியீடான | அரசின் வெளியீடான தமிழரசு இதழ் அரசின் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில் வெளியிடப்படும் தமிழ் இதழ் மாதமிருமுறை மற்றும் ஆங்கிலத்தில் மாத ஏடாகவும் வெளிவருகிறது. 48 பக்கங்களைக் கொண்டு | பரிந்துரை ஏற்கப்படாததால், ஆணைகள் ஏதும் தேவைப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | "தமிழரசு" பத்திரிகையில் விளம்பரம் செய்ய வேண்டும். | வெளிவரும் இதழின் வெளியீட்டு எண்ணிக்கை சுமார் 30,000 பெரும்பாலும் அரசு அலுவலகங்கள், உள்ளாட்சி அமைப்புகள் போன்ற இடங்களில் மட்டும் விநியோகிக்கப்படுகிறது. எனவே காலகெடுவுடன் கூடிய ஒப்பந்தப்புள்ளிகளை கோரும் அறிவிப்பு தமிழரசு இதழில் வெளியிடுவது சட்டபூர்வமான தேவையினை நிறைவேற்றுவதாக அமையாது. மேலும் ஒப்பந்தப்புள்ளி ஒளிவின்மை சட்டத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பை தனியாக ஒரு வெளியீட்டில் வெளியிடுவதற்கு வகை செய்வது ஆய்வில் உள்ளது. எனவே இப்பரிந்துரையை ஏற்றுக்கொள்ள இயலாது. | |
| | | நிதித்துறை | |
| 47–60 | ஒப்பந்தப் புள்ளிகள் குறித்த பரிந்துரைகள். | தற்போது தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மைச் சட்டம் இயற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இவைகள் குறித்து நடவடிக்கை ஏதும் தேவையில்லை. | தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி ஒளிவின்மைச் சட்டம் இயற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதால், தனியாக ஆணை தேவைப்படவில்லை. |
| 110. | உயர்மட்டக் குழு, மற்ற துறைகளுக்கும் நிதித் துறைக்கும் கோப்புகள் பலமுறை வந்து போவதைத் தவிர்க்கவும், விரைவாக முடிவுகள் எடுக்கப்படவும் மத்திய அரசில் உள்ளது போல் ஒவ்வொரு துறையிலும் ஒரு நிதி ஆலோசகர் ஒருவரை நியமனம் செய்ய வேண்டும் எனவும், இதனால் இப்போதுள்ள நிதிக்கட்டுப்பாடு தளர்த்த வேண்டிய அவசியம் ஏற்படாது என்றும் எனவே, மைய அரசில் இருப்பது போல, ஒவ்வொரு துறையிலும் துறை நிதி ஆலோசகர்களை நியமிக்கலாம். | மைய அரசில் இருப்பது போல மாநில அரசிலும் ஒவ்வொரு துறையிலும் நிதி ஆலோசகர்களை நியமிப்பது அவசியம் இல்லை என்றும் தற்போதைய நடைமுறையே தொடரலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. | தற்போதுள்ள நடைமுறைகள் இதற்கு வழிவகை செய்துள்ளதால் தனியாக ஆணை தேவைப்படவில்லை. |
| 111. | தற்போது நடைமுறையிலுள்ள வரவு செலவுத் திட்டத்தில் துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் முறையில் துறையின் மதிப்பீட்டு செலவினைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஓராண்டிற்கான நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. எனவே, அனைத்துத் துறைகளும் வருடத்தின் முடிவில் நிதிப் பகிர்வு செய்யக்கோரும் கட்டாயத்தைத் தவிர்க்க, துறைக்கான வரவு–செலவு திட்ட ஒதுக்கீடு (allotment) ஒரு முழு வருடத்திற்கு மொத்தமாக அனுமதிக்கப்படும்போது, அந்த ஒதுக்கீட்டுத் தொகையை, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அதுவும் முந்தைய மூன்று மாதங்களில் செய்யப்பட்ட செயல்பாடுகளை ஆய்வு செய்த பின்னர், நிதிப்பகிர்வு (Release) செய்யப்படலாம். | இப்பரிந்துரையை ஏற்றுக்கொண்டால் துறைகளுக்கு நிதி அளிப்பதில் தாமதம் ஏற்படும் என்பதாலும் தற்போதுள்ள காலாண்டுக் கட்டுப்பாட்டு முறை திருப்திகரமாக இருப்பதாலும் அம்முறையே தொடரலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. | " |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 112. | அரசின் நிதி நிலைக்குழு மற்றும் மாநில வளர்ச்சிக்குழு கூட்டங்கள் ஒழுங்காகக் கூட்டப்பட்டால், மாநில நிர்வாகத்தில் பல்வேறு துறைகளின் செயல்திறனை ஆழ்ந்து ஆராய சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்ற காரணத்தினால், நிதி நிலைக்குழு மற்றும் மாநில வளர்ச்சிக்குழுக்களின் காலாண்டுத் திட்ட ஆய்வுகளை மீண்டும் புதுப்பிக்கலாம். | முதலமைச்சரும் மற்றும் துறை அமைச்சர்கள் துறையின் வளர்ச்சிப்பணி முன்னேற்றம் பற்றி மாதாந்திர ஆய்வு நடத்துவதாலும், அமைச்சரவை அடிக்கடி கூடி வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் பற்றி ஆய்வு செய்வதாலும் அரசின் நிதிநிலைக் குழுவையோ, மாநில வளர்ச்சி நிலைக் குழுவையோ அடிக்கடி கூட்டவேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. | பரிந்துரை ஏற்கப்படாததால் ஆணையேதும் தேவைப்படவில்லை. |
| | பொதுத் துறை | | |
| 1. | தற்போது வகுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டத்தில் விலக்கு அளிக்கப்பட்டுள்ள இனங்கள் அதிகமாகவும் பொதுப்படையாகவும் உள்ளன. இது தகவல் வேண்டி வரும் கோரிக்கைகளை பெருமளவில் நிராகரிக்கக்கூடிய வாய்ப்புகளைத் தோற்றுவிக்கக்கூடும். குழுவின் இந்தக் கருத்துக்களை மனதில் கொண்டு, இச்சட்டத்திற்குத் தகுந்த திருத்தங்கள் செய்யும் பொருட்டு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவை அமைப்புகளைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் உள்ளிட்ட சிறு ஆய்வுக்குழு (Study Group) ஒன்றினை அரசு அமைக்கலாம். | தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டத்தை நிறைவேற்றியதில் தமிழ்நாடு தான் முதல் மாநிலம் ஆகும். இச்சட்டம், மே 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறுவதற்கான உரிமைச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்யும் பொருட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற உயர்நிலைக்குழுவின் பரிந்துரையினை, இச்சட்டம் குறித்து மக்களின் உணர்வுகளையும், கருத்துக்களையும் மேலும் சில காலம் கணித்தபின் பரிசீலிக்கலாம். | தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 1997ல் தகுந்த திருத்தங்கள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| 41. | தலைமைச் செயலர் மற்றும் அவருக்கு இணையான இரண்டு மூத்த அகிரிகளைக் கொண்ட பணியாளர்கள் குழு ஒன்று ஏற்படுத்தி அக்குழுவின் பரிந்துரையின் பேரில் முதலமைச்சர் அவர்கள் செயலர்கள் மற்றும் துறைத்தலைவர்களின் நியமனம் மற்றும் மாறுதல்களை முடிவு செய்யலாம். | இப்பரிந்துரை நடைமுறைக்கு ஏற்றதாகஇருக்காது. எனவே, ஏற்க இயலாது. | பரிந்துரை ஏற்கப்படாததால் ஆணைகள் ஏதும் வெளியிடப்படவில்லை. |
| 42. | மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் குழுவிற்கு மாவட்ட ஆட்சியர்கள்மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் நியமனம் மற்றும் மாறுதல்களை கவனிக்கும் அதிகாரங்களை வழங்கலாம். | இந்தப் பரிந்துரை நடைமுறைக்கு ஏற்றதாக இருக்காது. ஏனவே, ஏற்க இயலாது. | " |
| 45. | அனைத்திந்திய பணியாளர்களின் பணிச்சங்கங்கள் தங்களது ஒவ்வொரு சங்கத்திலும் ஒழுக்கவியல் குழு ஒன்றை ஏற்படுத்தி அனைத்திந்தியப் பணியாளர் எவரேனும் ஒழுங்கில்லாத அல்லது தவறான வழியில் ஈடுபடுவது தெரியவந்தால் அவரது பணி நிலையைக் கருத்தில் கொள்ளாமல் பொதுக்குழுவின் எதிர்ப்பு மற்றும் வெறுப்பை அவருக்கு தெரிவிப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தலாம். | இப்பொருள் அனைத்திந்திய பணியாளர்களின் பணிச் சங்கங்கள் சம்பந்தப்பட்டது என்பதால் இதன் மீது அரசு மட்டத்தில் தொடரக்கூடிய நடவடிக்கை ஏதும் இல்லை. | ஆணைகள் ஏதும் தேவைப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| 50. | 12 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள மூத்த அதிகாரிகளை மட்டும் மாவட்ட ஆட்சியர்களாக நியமனம் செய்யலாம். | இந்திய ஆட்சிப் பணிக்கான மேலாண்மை வழிமுறைகளின்படிதான், அலுவலர்கள், மாவட்ட ஆட்சியராக நியமனம் செய்யப்படுகிறார்கள். எனவே, தற்பொழுது நடைமுறையில் உள்ள செயல்பாட்டினைத் தொடரலாம். | தற்போதுள்ள நடைமுறை தொடரும். |
| | | பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை | |
| 30. | பழைய அமைப்பாகிய வருடாந்திர ரகசிய குறிப்பிற்குப் பதிலாக வருடாந்திர செயல்பாடு மதிப்பீட்டு அறிக்கை முறையை அறிமுகப்படுத்தலாம். | அரசாணை நிலை எண்.193, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 18.07.94ல் காலம் 5ல் பணித்தர ஆய்வு, அறிக்கை திட்டம், ஆண்டு மந்தண அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பரிந்துரையின் மீது மேல் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை. | இதற்கான படிவம் ஏற்கனவே வரையறுக்கப்பட்டுள்ளது. |
| 31. | ஒவ்வொரு துறையிலும் சில பதவிகள், மற்ற பதவிகளில் உள்ளதைவிட ஊழல் புரிவதற்கு அதிக வாய்ப்புகளை கொடுக்கின்றன. அந்த மாதிரி பதவிகளிலிருப்பவர்களை ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவில் வேறு பதவிகளுக்கு மாற்றுதல் கொள்கையின் கீழ் மாற்றுதல் வேண்டும். இந்த மாதிரியான இடங்களில் பணிபுரிபவர்களின் வருடாந்திர சொத்து விவர அறிக்கை விழிப்புப்பணி அலுவலர்களின் பார்வைக்கு முறைப்படி அவ்வப்போது வைக்கப்படல் வேண்டும். | ஒரு பதவியிலோ ஒரே இடத்திலோ மூன்றாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்துள்ள அரசு ஊழியர்களை மாற்றம் செய்வதற்கான விரிவான அறிவுரைகள் மற்றும் அதனைச் சார்ந்த விளக்கங்கள் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் 7.1.94 நாளிடப்பட்ட அரசு ஆணை 10ல் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது நடைமுறையிலுள்ள அறிவுரைகள் நீதியரசர் இராமானுஜம் குழுவின் பரிந்துரைக்கு ஏற்புடையதாக இருப்பதால் மேற்கொண்டு இது குறித்த ஆணைகள் வெளியிடத் தேவையில்லை. | தற்போதுள்ள நெறிமுறைகளிலேயே இதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. |
| | | கூர் உணர்வு உள்ள பணிகளில் இருக்கும் அலுவலர்களின் ஆண்டு சொத்து விவர அறிக்கை மற்றும் சொத்துக்கள் வாங்குதல், விற்றல் ஆகியவற்றின் கால முறை அறிக்கைகளை தொடர்புடைய துறைகள் ஆய்வு செய்யவும் தேவை ஏற்படின் கண்காணிப்பு குழுவுக்கு அனுப்பவும், தற்போது நடைமுறையிலுள்ள அறிவுரைகள் வழிவகை செய்கின்றன. எனவே, இந்தப் பரிந்துரையின் மீது தனியாக ஆணைகள் வெளியிட தேவையில்லை. | |
| 44. | குடிமைப் பணியில் பணியமர்த்தப்படும் எல்லோரும் தகுதி வாய்ந்த மேலதிகாரிகளால், பொது நலன் கருதி, ஆணையிடப்படும்போது மாநிலத்திலுள்ள எந்த ஒரு அரசு அமைப்பிலும் பணிபுரியும் பொறுப்பு உள்ளவர்கள் என்பதைக் கோட்பாடாக்கி ஒரு குடிமைப்பணி சட்டம் (Civil Services Act) இயற்றலாம். | தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறைகளில் பணியாளர் சம்பந்தப்பட்ட அனைத்து நெறிமுறைகளும் உள்ளன. இவை கையேடு வடிவில் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே, குடிமைப் பணிச் சட்டம் (Civil Services Act) குறித்த நீதியரசர் | ஏற்கப்படவில்லை. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | | இராமானுஜம் குழுவின் பரிந்துரையினை ஏற்கத் தேவையில்லை. | |
| 46. | அமைச்சர்கள் அரசு பணியாளர்களிடையிலான உறவை நெறிப்படுத்த சட்டரீதியான விதிகளைப் பரிசீலித்து உருவாக்கலாம். கொள்கை ரீதியான எல்லா விஷயங்களையும் பொறுப்பிலிருக்கும் அமைச்சர் முடிவெடுக்கலாம். அதுவல்லாது, கொள்கைகளை செயலாக்கம் செய்வது சம்பந்தமான எல்லா விஷயங்களையும் அரசு செயலரின் பொறுப்புக்கு விடலாம். | ஒரு துறையின் அமைச்சருக்கும் அத்துறைச் செயலருக்குமிடையிலான உறவு குறித்த விரிவான அறிவுரைகள் தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்களில் உள்ளன. இந்த அறிவுரைகளைச் செயலாக்குவதில் தற்போது எந்த இடர்பாடுகளும் எழாததால் இப்பரிந்துரை குறித்து மேல் நடவடிக்கை தேவையில்லை. | தற்போதுள்ள நடைமுறை தொடரும். |
| 47. | தமிழ்நாடு அரசு அலுவல் விதி 63ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட விதி 12 (2), விதி 61 மற்றும் அறிவுரை எண்.100, நியாயமற்ற, முறையற்ற அலுவல் முடிவுகளை வன்மையாக எதிர்க்கிறது. இந்த விதிகளை எல்லாத் துறைத் தலைவர்களுக்கும், அவர்களுடைய மாவட்ட மூத்த அதிகாரிகளுக்கும் தனியாக சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கலாம். | தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்களில் துறைத் தலைவர்கள் சம்பந்தப்பட்ட இனங்கள் அவர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. ஏனைய அறிவுரைகள் தலைமைச் செயலகத்தின் நடைமுறைப் பற்றியதாகும். அவை துறைத் தலைவர்களுக்கு உரியதல்ல. எனவே, இப்பரிந்துரை மீது மேல் நடவடிக்கை தேவை இல்லை. | தலைமைச் செயலகத்திற்கு மட்டுமே இது பொருந்தி வருவதால் நடவடிக்கை தேவையில்லை. |
| 106. | கோப்புகளை பரிசீலிக்கும்போது விரிவான குறிப்புரைகளை கூட்டாகத் தயாரிப்பதற்கு ஏதுவாக சார்புச் செயலாளர் மற்றும் துணைச் செயலாளர்கள் அவர்களுக்குக் கீழ் பணியுரியும் அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டங்களை அடிக்கடி கூட்ட வேண்டும். | தலைமைச் செயலக நடைமுறை நூல் பத்தி 81ல் ஏற்கனவே இது குறித்த அறிவுரைகள் உள்ளதால் இப்பரிந்துரை மீது மேல் நடவடிக்கை தேவை இல்லை. | தலைமைச் செயலக நடைமுறை நூலில் ஏற்கனவே இதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. |
| 107. | கடைசிக் கட்ட முடிவினை எடுப்பதில் ஏற்படும் தடங்கல்களைத் தவிர்க்கும் பணியிலும், பல்வேறு துறைகளின் கருத்துரைகளை திரட்டும் பணியிலும் தேவைப்படும் இணைப்பு நடவடிக்கைக்காக துறைக் கூட்டங்கள் அனைத்தும் இணைச் செயலாளர்கள் அளவிலே நடத்தப்பட வேண்டும். | தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் பத்தி 41ல் இது குறித்த அறிவுரைகள் உள்ளதால், இப்பரிந்துரை மீது மேல்நடவடிக்கை தேவையில்லை. | தலைமைச் செயலக அறிவுரை நூலில் ஏற்கனவே இதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. |
| 108. | இந்த அத்தியாயம் பத்தி 8ல் பரிந்துரை செய்துள்ளவாறு அமைச்சர்கள் நேர்முக உதவியாளர்களின் வேலை மற்றும் பொறுப்பு பற்றிய விதிமுறைகளை வகுக்கலாம். | தலைமைச் செயலக நடைமுறை நூல் பத்திகள் 10, 197, 198, 628 ஆகியவற்றில் ஏற்கனவே இது குறித்த அறிவுரைகள் உள்ளதால் இப்பரிந்துரை மீது மேல் நடவடிக்கை தேவையில்லை. | தலைமைச் செயலக அலுவலக நடைமுறை நூலில் ஏற்கனவே இதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன |
| 109. | ஓர் அலகுத் திட்டத்தின் கீழ் ஒருவருக்குத் தாய்த் துறையில், பதவி உயர்வு வரும்போது அவரை வேறு துறைக்கு அனுப்புவதற்குப் பதிலாக அவரது தாய்த் துறையிலேயே அவரது பதவியை தரம் உயர்த்தி அவருக்குப் பதவி உயர்வு அளிக்கும் வகையில், விதிமுறைகளைத் திருத்தி அமைக்கலாம். துறைகளின் திறமையைப் பாதுகாக்க அத்துறைகளின் சம்பந்தப்பட்ட | 1961–ம் ஆண்டிலேயே நிதித் துறை (திட்டம் உட்பட) மற்றும் சட்டத் துறை நீங்கலாக உள்ள ஏனைய அனைத்து செயலகத் துறைகளும், ஒலகின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. ஓலகின் கீழ் உள்ள அனைத்து துறைகளில் பணியாற்றும் அலுவலர்கள் | ஏற்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைகளில் வல்லுநர்களாக இருப்பவர்களை அந்தத் துறைகளிலேயே வைத்துக் கொள்வது அவசியமாகும். | பதவி உயர்வு/நிலை உயர்த்தப்படும்போது இவ்வலகின் எனைய துறைகளுக்கு மாற்றம் செய்யும் நிலை ஏற்படுகிறது. இம்முறை நன்கு இயங்கி வருவதால் இப்பரிந்துரை மீது மேல்நடவடிக்கை தேவையில்லை | |
| 149. | மாநில நிர்வாக தீர்ப்பாயத்தால் நிர்வாக தீர்ப்பாயச் சட்டம், 1985 பிரிவு 24ன் சட்டத்திற்கு முரண்பாடாக அளித்த இடைக்கால தடையை நீக்கக் கோரி அரசு உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம். | மாநில நிர்வாக தீர்ப்பாயச் சட்டம் பிரிவு 24ன் கீழ் மாநில நிர்வாகத் தீர்ப்பாயத்தால் இடைக்காலத் தடை வழங்குவதற்கான விதிமுறைகள் ஏற்கனவே வகுத்து வரையறுக்கப்பட்டுள்ளன. குறிப்பிடப்படும்படியான அத்து மீறல்கள் பார்வைக்கு வரப்பெறின் அவற்றின் தகுதியின் அடிப்படையில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்குப் பதிலாக தற்போது உயர்நீதிமன்றத்தில் உள்ள பகுதி நடுவர் ஆயத்தில் மேல்முறையீடு செய்ய வழிவகைகள் உள்ளன. எனவே, இப்பரிந்துரை மீது மேல்நடவடிக்கை தேவையில்லை. | தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயச் சட்டத்தில் இதற்கு ஏற்கனவே வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. |

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை

முதல் அறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 46. | முக்கிய கட்டுமானப் பணிகள் தொடர்பான அனைத்து தொழில் நுட்ப விஷயங்கள் குறித்து ஒட்டு மொத்தமாக கண்காணிக்க விழிப்புப்பணி ஆணையத்தின் கீழ் நேரடியாகப் பணியுரிய உயர்நிலைத் தொழில்நுட்பக் குழு ஒன்று அமைக்கப்படலாம். இக்குழுவிற்குத் தலைமைப் பொறியாளர் பதவித் தரத்திலுள்ள அதிகாரி ஒருவர் தலைவராக இருக்கலாம். இவருடைய சார்நிலைப் பணியாளர்கள், கணக்கு மற்றும் பொறியியல் பிரிவுகளிலிருந்து நியமிக்கப்படுவர். பெரும் கட்டுமானப் பணிகளைப் பொறுத்தமட்டில் விழிப்புப்பணி ஆணையத்திற்கு வரப்பெறும் பாதகமான தகவல் அல்லது இயல்பான நடைமுறையில் குறை, தணிக்கையில் வெளிவரும் பாதகமான பொருள்களை பற்றி தொழில்நுட்ப தணிக்கை செய்வது இக்குழுவின் பொறுப்பாகும். | விழிப்புப் பணி ஆணையம் மற்றும் ஊழல்தடுப்பு கண்காணிப்புத் துறையின் கீழ் தனியாக நியமிக்கத் தேவையில்லை. சம்பந்தபட்ட துறைகளில் தொழில் நுட்பக் குழு நியமிக்கலாம். | ஏற்கப்படவில்லை. எனினும் நீர்வள ஆதார அமைப்பின் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் ஒரு கண்காணிப்புப் பொறியாளரை தலைமையாகக் கொண்டு விழிப்புப் பணிக்குழு ஒன்றினை அமைக்க பொதுப்பணித்துறை ஆணை வெளியிட்டுள்ளது. |

இரண்டாவது அறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2. | அரசு அலுவலகங்களில், பணி அல்லது வசதி செய்து தாக கேட்டு வரும் எல்லா விண்ணப்பங்களுக்கும் குறியீட்டு எண் மற்றும் தேதி கொண்ட அச்சிடப்பட்ட படிவங்களின் மூலம் ஏற்ளிப்பு வழங்குதல் வேண்டும். இது மேற்படி விண்ணப்பங்களை பின்னாளில் அலுவலகத்தில் கண்டுபிடிக்க உதவும். அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் ஒரு பொருத்தமான ஏற்ளிப்பு துண்டு (Acknowledgement Slip) இணைக்கப்படலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | பரிந்துரை எண்கள் 2, 3, 4, 5, 9, 18, 19, 27, 33, 34, 35, 36, 37, 38 மற்றும் 39.<br>இவை அனைத்துத் துறைத் தலைவர்களுக்கும் நடவடிக்கைக்காக அனுப்பப் படுவதால், பொது பரிந்துரை-களாக கருதப்பட்டுள்ளன. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 3. | தனியாரால் அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவம் அரசு நிர்ணயித்த வடிவில் அமைக்கப்பட்டிருந்தால் அதையும் ஏற்றுக் கொள்ளலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | இவை குறித்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தமிழ் வளர்ச்சி பண்பாடு, வேளாண்மை, சிறுதொழில், பொது, திட்டம் மற்றும் வளர்ச்சி, வணிகவரி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், நெடுஞ்சாலை, காதி மற்றும் கைத்தறி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, எரிசக்தி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, சமூக நலம் மற்றும் சத்துணவு, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, தொழில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை போன்ற துறைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 4. | எல்லா அரசு அலுவலகங்களிலும் விண்ணப்பங்களை பெறுவதற்கும் ஒரு குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிவைத் தெரிவிப்பதற்கும் ஏற்பாட்டினை செய்யலாம். | காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அவை நீங்கலாக, விண்ணப்பங்களைப் பெற்று ஏற்பளிக்க ஒரு வார காலமும், முடிவைத் தெரிவிக்க ஒரு மாதம் என்று காலக்கெடு நிர்ணயம் செய்யலாமென்று முடிவெடுக்கப்பட்டது. | " |
| 5. | கோரிக்கைகளை மறுக்கும் அல்லது நிராகரிக்கும்போது அதற்கான காரணங்களை விண்ணப்பதாரர்க்கு தெரியப்படுத்தல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 9. | ஒரு துறையின் வழக்கைப் பரிசீலிக்க இன்னொரு துறையின் மறுப்பின்மை சான்றிதழ் தேவைப்பட்டு, அதனைக் கேட்டு இரண்டாவது துறையிலிருந்து ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் எந்தவித பதிலும் | ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசுத் துறைகளுக்கென மறுப்பின்மைச் சான்று கோருமினங்களில் மட்டும் 30 நாட்களுக்குள் கேட்கப்பட்ட துறைக்கு பதில் அனுப்ப | " |

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கப் பெறாத நிலையில், அந்தத் துறைக்கு இதில் ஆட்சேபணை ஏதுமில்லை என்று யூகமாகக் கொண்டு முந்திய துறை மேற்படி வழக்கில் மேல் நடவடிக்கைகளைத் தொடர அனுமதிக்கலாம். இவ்வாறு ஊகம் செய்து நடவடிக்கை எடுக்க எங்கெங்கு பொருந்துமோ அவற்றைப் பரிசீலித்து, அந்த நிகழ்வுகளில் அனுமதிக்கலாம். | வேண்டும். தனியாருக்கு மூன்று மாதங்களுக்குள் பதில் தரவேண்டும். பாதிக்கப்பட்ட தனி நபருக்கு மேல்முறையீடு செய்ய வழிவகை செய்யவேண்டும். | |
| 18. | மின்சார வாரியம், வீட்டுவசதி வாரியம், மாநகராட்சி குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் ஆகியவைகளில், கேட்பு நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்கு முந்திய பாக்கியை வசூலிக்க புதிய முதல் கேட்பு அறிவிப்பு (New and First Demand) வெளியிடுவதிலிருந்து தடை செய்யலாம். | பரிந்துரையின் நோக்கம் உடனுக்குடன் வசூல் செய்ய வேண்டியதாகும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 19. | வரிகொடுப்பவர்களின் இருப்பிடம் சென்று வரி வசூலிக்கும் அலுவலர்கள், வரி செலுத்துவோர் தங்கள் புகார்களை பதிவு செய்யும் பொருட்டு ஒரு புகார் புத்தகம் எடுத்துச் செல்ல ஆணையிடலாம். பின் அடுத்தத்தடவை வரி வசூலுக்காக வருவதற்கு முன்னால் அவர்களுக்கு அந்த புகாரின் மேல் எடுத்த நடவடிக்கைக்களை தெரியப்படுத்தலாம். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. வரி வசூலிக்கும் அலுவலகங்களில் புகார் புத்தகம் வைக்கப்பட வேண்டும். அங்கு பொது மக்கள் புகார்களை பதிவு செய்யலாம். அந்தப் புகார்களின் மீது எடுத்த நடவடிக்கை பற்றி மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும். சென்னையில், மாநாகாராட்சி மண்டல அலுவலகங்களில் வரி வசூலிக்க ஏற்படு செய்ய வேண்டும் | " |
| 27. | ஒவ்வொரு துறைத் தலைமையையும் அந்தந்தத் துறையில் நடக்கும் பணிகளை பரிசீலித்து, அவைகளில் பொதுமக்களுக்கு தெரிய வேண்டியவை என்று இனம் கண்டவற்றை அப்பணி நியாயமான, நல்ல முறையில் நடக்கின்றனவா என்று பொது மக்கள் அறியு மாறு விளம்பரம் செய்யலாம். உதாரணத்திற்கு ஒரு கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தம் விடப்பட்டிருக்கிறது என்றால் அந்தக் கட்டிடம் கட்ட ஒப்பந்த மதிப்பு, ஒப்பந்தத் தாரரின் பெயர் மற்றும் விலாசம், ஒப்பந்தம் எடுத்த தேதி, எந்த தேதிக்குள் முடிக்க வேண்டும் என்ற விவரம் ஆகியவைகளை பொது மக்கள் அறியும்படி செய்யலாம். இது அந்த ஒப்பந்தத்தில் பினாமியாக ஒருவர் இருந்தால் அவரை உடனடியாக வெளிப்படுத்தும். பொதுமக்கள் ஒப்பந்தத் தொகை என்னவென்று அறிந்திருந்தால் முறைகேடுகள் நடப்பதை தடுக்க உதவும். | தற்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும் எல்லா துறைகளிலும் விரிவுபடுத்தி நடைமுறைப்படுத்தலாம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. | |
| 33. | குறித்த காலங்களில் பொதுமக்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கூட்டத்தை மூத்த அதிகாரிகள் கூட்டி, நடந்து கொண்டிருக்கும் வேலைகளின் விபரம் மற்றும் நீண்ட நிலுவையிலிருக்கும் பொதுமக்கள் சார்ந்த பிரச்சினைகளின் விபரங்கள் குறித்து விளக்கமளித்தல் வேண்டும். | இப்பொழுது நடைமுறையில் உள்ளது. தொடர்ந்து செயல்படுத்தலாம். | " |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 34. | ஒவ்வொரு துறைக்கும் அதன் வருடாந்திர செயல்பாடு குறித்த அறிக்கை அளிப்பதற்கான ஒரு படிவம் வடிவமைக்க வேண்டும். அதில் பொதுமக்களுக்கு நேரிடையாகத் தொடர்புடைய திட்டங்கள் மற்றும் துறையின் செயல்பாடுகள் பற்றி குறிப்பிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | பொதுவான பரிந்துரை எண்கள் 2, 3, 4,5, 9, 18, 19, 27, 33, 34, 35, 36, 37, 38, மற்றும் 39ன் மீது சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளும் ஆணைகள் வெளியிட்டுள்ளன. |
| 35. | ஒரு துறைத் தலைவர், அத்துறையின் செயல்பாடு குறித்து பொதுமக்கள் கருத்து என்னவென்பதை நிபுணர்கள் உதவி கொண்டு அறிந்து குறித்த காலத்தில் மதிப்பீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. எந்த திட்டத்தை ஆய்வு செய்யலாம் என்பதையும், எந்த அமைப்பு/நிறுவனம் மூலம் இப்பணியை மேற்கொள்ளலாம் என்பதையும் அரசு முடிவு செய்யும். | " |
| 36. | துறைத் தலைமை அத்துறையின் நடவடிக்கைகளை பரிசீலித்துப் போதிய அளவு அதிகாரங்களை தேவைக்கேற்ப துறைக்குள்ளே பகிர்ந்தளித்தல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 37. | துறைத் தலைமை மூத்த அதிகாரிகளைக் கொண்டு ஒரு சீரான திட்டமிடப்பட்ட களப்பணி ஆய்வு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதோடு, ஆய்வின் கண்டுபிடிப்புகளை ஒவ்வொரு ஆண்டும் முறைப்படி பரிசீலிக்க வேண்டும். இந்த பரிசீலனையின் முடிவு வருடாந்திர அறிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 38. | பொதுத் துறைகளில் மேல்மட்ட அலுவலர்களை நியமிக்கும்போ அவரது தொழில் திறமை மற்றும் அத்துறையில் அவர்களுக்குள்ள முந்தைய அனுபவப் பின்னணியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |
| 39. | கூட்டத்தில் அல்லது விதிகளில் உள்ள விருப்புரிமை அதிகார சார்த்துகள் (Discretionary Power) தவறு செய்வதற்கும், ஊழல் செய்வதற்கும் வழிவகுக்கிறது. இம்மாதிரியான விதிகளை செயல்படுத்தும்போது கடைபிடிக்கப்பட வேண்டிய செயல்பாடுகள் குறித்து வரையறுக்கப்பட்ட தெளிவான முறைகளைக் கடைபிடிக்க வேண்டும். அரசளவில் இத்தகைய விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்த துறைத்தலைமை உள்ளடக்கிய மூன்றுபேர் கொண்ட *தித அலுவலர்கள் குழுவின் பரிந்துரையின்படி செயல்படுத்த வேண்டும்.* | ஏற்றுக் கொள்ளப்பட்டது. விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி வரும் துறைகளில் ஏற்கனவே நெறிமுறைகள் இருந்தால் அவை தொடரலாம். இத்தகைய விருப்புரிமை பற்றிய நெறிமுறைகள் இல்லாத துறைகளில் நெறிமுறைகள் வகுக்கலாமென முடிவெடுக்கப்பட்டது. | " |

| | | | |
|---|---|---|---|
| 113. | 1975 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அதிகாரிகள் அமைப்பினை, புதிய அமைப்பாக மாற்ற வேண்டும். | பரிந்துரை எண்கள் 113 முதல் 148 முடிய:<br>அமைச்சர்கள் மட்டக் குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்தது. மைய அரசு லோக்பால் குறித்த சட்டம் இயற்றியபின், அச்சட்டத்தின் கருத்துக்களை கவனத்தில் கொண்டு இறுதி முடிவெடுக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. | கொள்கையளவில் ஒரு சட்டம் கொண்டுவரலாம் என ஒப்புக் கொள்ளப்பட்டது. எனினும் மைய அரசு கொண்டுவர எண்ணியுள்ள லோக்பால் சட்டம் இயற்றப்பட்டபின், அச்சட்டத்தில் உள்ள நுணுக்கங்களை ஆய்வு செய்து இறுதி முடிவு எடுக்கப்பட உள்ளது. |
| 114. | ஒரு துறையில்/பொது நிறுவனத்தின் தலைமைக் கண்காணிப்பு அதிகாரியைத் தேர்வு செய்து பணியிலமர்த்துவது, மாநில விழிப்புப்பணி ஆணையத்தின் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும். | " | |
| 115. | ஒரு துறையின் சார்நிலைப் பணியில் உள்ள கண்காணிப்பு அதிகாரியைத் தேர்ந்தெடுத்து பணியிலமர்த்துவது, தலைமைக் கண்காணிப்பு அதிகாரியின் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும். | " | |
| 116. | ஒரு துறையைப் பற்றிய குறைகளுக்குப் பரிகாரம் கேட்டுவரும் ஒரு நபரின் துயர் துடைக்கும் ஆம்புட்ஸ்மனாக ஒவ்வொரு கண்காணிப்பு அதிகாரியும் பொறுப்புடன் பணியாற்ற வேண்டும். | " | " |
| 117. | கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிக்கான பதவிகளை ஒரே அதிகாரியின் பொறுப்பில் இல்லாமல் தனித்தனியாக நியமிக்கப்பட வேண்டும். இவ்விரு பதவிகளுக்கான கடமைகளும், பொறுப்புக்களும் வெவ்வேறானவையாதலால், இரண்டு பதவிகளையும் ஒருங்கிணைப்பது விரும்பத்தக்கதல்ல. | " | " |
| 118. | மாநில விழிப்புப்பணி ஆணையத்திற்கு அறிவுரைக்காக அனுப்பப்படும் நேர்வுகளில், தலைமைக் கண்காணிப்பு அதிகாரியின் சொந்தக் குறிப்பும் கருத்துரையும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். | " | " |
| 119. | தலைமைக் கண்காணிப்பு அதிகாரியாக உள்ள ஒவ்வொருவரும் அவர் பணியாற்றும் துறை அல்லது பொது நிறுவனத் தலைவரும், இடை நிலை அதிகாரி குறுக்கீடு ஏதுமின்றி நேரிடையாகத் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். | " | " |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 120. | தற்போது, பொதுப்பணித்துறை (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் சேர்த்து) காவல் துறை, வனத்துறை, வருவாய்த்துறை மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றில் உள்ள பகுதி நேர கண்காணிப்பு அதிகாரிகளுக்குப் பதிலாக முழுநேர கண்காணிப்பு அதிகாரிகளை நியமிக்க வேண்டும். | " | " |
| 121. | முதலமைச்சர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்கள், மாநகராட்சி/நகராட்சி/ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் உள்ள தோந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், மற்றும் அரசுச் செயலாளர்கள் ஆகியோர் மீது சுமத்தப்படும் ஊழல் மற்றும் முறையற்ற நிர்வாகம் குறித்த புகார்களை விசாரிக்கும் சட்டப்படியான (Statutory) ஒரு அமைப்பாக மாநில விழிப்புப்பணி ஆணையம் செயல்பட வேண்டும். | " | " |
| 122. | இவை போன்ற மேலிடத்து அமைப்புகள் மீது தோன்றும் புகார்களுக்கு மாநில விழிப்புப்பணி ஆணையம் ஒரு ஆம்புட்ஸ்மனாக விளங்க வேண்டும். | " | " |
| 123. | உச்ச நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றியவரைத் தலைவராகவும், நீதித்துறை அல்லது அரசுத்துறை பின்னணி கொண்ட இருவரை உறுப்பினர்களாகக் கொண்டு நீதித்துறை சார்ந்த அமைப்பாக இது அமைய வேண்டும். | " | " |
| 124. | புலனாய்வு மேற்கொள்ளவும், வழக்குத் தொடரவும், தனது சொந்த அலுவலர்களைக் கொண்டு ஆணையம் செயல்படவேண்டும். மேலும், குறிப்பிட்ட ஒரு குற்றத்தின் மீது புலனாய்வு நடத்துகையில் போதுமான ஆதாரம் கிடைத்திருப்பின், அக்குற்றவாளி மீது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து வழக்குத் தொடர அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். | " | " |
| 125. | பொதுப்பணியாளர் நீங்கலாக எந்த ஒரு நபரும் ஆணையத்தின் முன் புகார் செய்யலாம். | " | " |
| 126. | புகார் கொடுக்க விரும்பும் பொதுப்பணியாளர் எவரும் முதற்கண் புகார்களை ஆளநருக்கு அனுப்ப வேண்டும். அப்புகார் மீது, அரசின் மூத்த அதிகாரி ஒருவர் ஆய்வு செய்தபின், குழுமத்தின் முறையான விசாரணைக்குத் தகுதியானதா என்பதை ஆளுநர் முடிவு செய்வார். அதன் பிறகு குழுமத்தின் ஆய்வுக்கு அனுப்பப்பட வேண்டும். | " | " |
| 127. | இவ்வறிக்கையின் இணைப்பு–3ல் குழுமத்திற்கான, செயல்முறை மற்றும் அறிவுரைகள் அடங்கிய தமிழ்நாடு மாநில விழிப்புப்பணி ஆணைய சட்ட வரைவு முன்வடிவு கொடுக்கப்பட்டுள்ளது. | " | " |

| | | | |
|---|---|---|---|
| 128. | மாவட்ட அளவில் கொண்டு வரப்படும் குறைபாடுகள் மீது, தீவிர ஆய்வு செய்யும் அதிகாரம் படைத்த, மாவட்ட குறை தீர்க்கும் குழு ஒன்றையும் ஏற்படுத்த வேண்டும். மாவட்டக் குறை தீர்வு காண் குழுவில் தலைவர், உறுப்பினர் இருவர், ஆகியோர் இருப்பர். மாவட்ட ஆட்சியர் அலுவல் முறையில் (Ex-officio) இக்குழுவின் தலைவராக இருப்பார். காவல் துறைக் கண்காணிப்பாளர், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆகியோர் அலுவல் முறையில் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பர். பொது வாழ்வில் ஈடுபடுவோர் தவிர அரசு ஊழியர்களுக்கு எதிரான புகார்களை ஆய்வு செய்வது மாவட்டக் குறை தீர்வுகாண் குழுவின் கடமையும் பொறுப்புமாகும். | " | " |
| 129. | தற்போதுள்ள மாவட்ட ஆய்வுக் குழுவுக்கும் பதிலாக, பொதுமக்கள் குறைகளைக் களைய கூடுதல் பொறுப்புகளையும், கடமைகளையும் வரையத்துக் கூடுதல் பணியாளர்களுடன் ஒரு மாவட்ட விழிப்புப்பணிக் குழுவை ஏற்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. இக்குழு, மாவட்ட நிருவாகத்தில், அதிமுக்கியமான பகுதிகளில் திடீர் சோதனைகள் மேற்கொள்ள வேண்டும். | " | " |
| 130. | தற்போது நடைமுறையில் இருக்கும் விழிப்புப்பணி ஆணையம் புதிதாக உருவாக்கப்பட இருக்கும் மாநில விழிப்புப்பணி ஆணையம் என்ற அமைப்புடன், அவ்வமைப்பு புதிய சட்டப்படி அமைக்கப்படும் பொழுது சேர்க்கப்படும். | " | " |
| 131 | மூத்த அரசு அதிகாரிகளுக்கு எதிரான விசாரணையை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை நடத்துவதற்கு ஆசிடமிருந்தோ, அல்லது விழிப்புப் பணி ஆணையரிடமிருந்தோ முன்னனுமதி பெறவேண்டும் என்றுள்ள தற்போதைய நடைமுறைத் தடைகள் திருத்தியமைக்கப்பட வேண்டும். மாற்றியமைக்கப்படும் இத்திட்டத்தின் கீழ் அரசின் முன் அனுமதியின்றி எந்த ஒரு அரசு அலுவலருக்கு எதிராகவும், ரகசியமான முறையில் தொடக்க விசாரணை நடத்தி தேவையான தகவல்களைத் திரட்ட போதுமான அலுவல் சுதந்திரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்கத்திற்கு வழங்கப்படும். சிறப்புத் தொகுதியைச் சார்ந்த மூத்த அரசு அதிகாரிகளுக்கு மட்டும் தொடக்க விசாரணைகள் தேவை என்று கருதும்போது அல்லது பதிவு செய்யப்பட்ட வழக்குகளுக்கு மட்டும் ஊழல் தடுப்பு – கண்காணிப்பு இயக்ககம் புதிதாக அமைய உள்ள மாநில விழிப்புப்பணி ஆணையத்திடமிருந்து அனுமதியைப் பெற்றால் போதுமானது. ஏனைய இதர அதிகாரிகளுக்கு இவ்வனுமதியைப் பெறத் தேவையில்லை. | " | " |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 132. | அதிக அளவில் வளர்ந்து வரும் வேலைப் பளுவைக் குறைக்கும் பொருட்டு அதே அத்தியாயத்தில்–15ல் ஏற்கனவே பரிந்துரை செய்துள்ளவாறு ஊழல் தடுப்பு – கண்காணிப்பு துறைக்கு கூடுதலான பணியாளர்கள் மற்றும் வாகனங்களை வழங்கலாம். | " | " |
| 133. | ஊழல் தடுப்பு – கண்காணிப்புத் துறை ஊழல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் மட்டுமல்லாமல் அந்நியச் செலாவணி முறைப்படுத்தும் சட்டம் (Foreign Exchange Regulation Act), அந்நிய உதவித் தொகை முறைப்படுத்தும் சட்டம் (Foreign Contribution Regulation Act), நிறுவனச் சட்டம் (Companies Act) போன்ற பொருளாதார சட்டங்களில் மீறல்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளையும் தற்பொழுது விசாரித்து வருகின்றது. ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்ககத்தின் புலனாய்வு அலுவலர்களுக்கு மேற்கண்ட பொருளாதார சட்டங்களில் முனைப்பான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். | " | " |
| 134. | ஊழல் தடுப்பு – கண்காணிப்புத் துறையின் புலனாய்வு அதிகாரிகளை தேர்வு செய்து, அவர்களது நேர்மை மற்றும் தொழில்நுட்ப அனுபவம் ஆகியவற்றை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல் உளவியல் பரிசோதனைகள் (Pschological Test) மூலம் தீர்மானிக்கக் கூடிய அவர்களது விழிப்புப் பணிக்கான அறிவுத் திறனும் அடிப்படையாக அமைய வேண்டும். | " | " |
| 135. | ஊழல் தடுப்பு – கண்காணிப்புத் துறையின் புலனாய்வு அலுவலர்கள் பிரிவு, கணக்கர்கள், தணிக்கையாளர்கள், பொறியாளர்கள், கொண்ட அலுவலர்கள் அடங்கிய தொகுப்பாக ஆக்கப்பட வேண்டும். | " | " |
| 136. | ஊழல் தடுப்பு – கண்காணிப்புத் துறையின் புலனாய்வுப் பிரிவின் வேலைப் பளுவை சமாளிக்கக் கூடிய அளவில் வைத்துக் கொள்வதற்கு 'C' மற்றும் 'D' தொகுதி அலுவலர்களுக்கு எதிரான விசாரணைகளை அந்தந்த துறை அலுவலர்களிடமே விட்டுவிடலாம். மேலும் 'A' மற்றும் 'B' அலுவலர்களுக்கு எதிரான விசாரணைகளை ஊழல் தடுப்பு – கண்காணிப்புத் துறை மேற்கொள்ளலாம். | " | " |
| 137. | மத்தியப் புலனாய்வுப் பிரிவு ஒன்று விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககத்தில், ஒரு காவல்துறை கண்காணிப்பாளரின் கீழ், போதிய அலுவலர்களுடன், நிருவாகத்தில் உயர்மட்டத்தில் ஊழல் குறித்து புலனாய்வு செய்வதில் முழு கவனத்தையும் செலுத்தும் வகையில் நியமிக்கலாம். | " | " |
| 138. | விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககத்தில் உள்ள சட்ட | | |

| | | | |
|---|---|---|---|
| | ஆலோசகப் பிரிவை பத்தி 20–ல் குறிப்பிட்டுள்ளது போல் பலப்படுத்துவது தேவைப்படுகிறது. | " | " |
| 139. | ஊழல் வழக்கில், ஊழல் குற்றச்சாட்டிற்காக தண்டனையடைந்த அரசு அலுவலர்கள் மீது, அவர் மீது ஊழல் வழக்கின் கீழ் குற்றவாளி என வழக்கு தொடரும்போது சேர்ந்திருக்கும் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய ஒரு புதிய சட்டம் இயற்றலாம். தற்போது குற்றவியல் சீர்திருத்தம் 1944ல் உள்ள சரத்துக்கள் இவ்வகை சொத்துக்களை பறிமுதல் செய்ய அனுமதியளிக்கவில்லை. இந்த புதுச் சட்டத்தின் வடிவமைப்பு இந்த அத்தியாயத்தின் பத்தி 21ல் குறிப்பிடப்பட்டுள்ளது. | " | " |
| 140 | தற்பொழுது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை ஏறக்குறைய காவல் துறை பிரிவாக கருதப்படுகிறது. இதன் பணியைப் பொருத்தவரையில் இது அவ்வாறு இல்லை. இது முழுவதுமாக ஒரு விசாரணை செய்யும் அமைப்பாக மட்டும் செயல்பட்டு வருகிறது. ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்ககத்தின் அமைப்பு முறை, அலுவல்கள், பொறுப்புகள் மற்றும் புலனாய்வு அதிகாரங்கள் ஆகியவற்றிக்காக , அதற்கு, நேரிடையாக சட்டப்படியான அடிப்படை அதிகாரம் அளிக்கலாம். சாட்சிகளுக்கு அழைப்பாணை கொடுத்து அவர்களை அழைத்து விசாரித்தல், சோதனைகளை நடத்துதல், கைப்பற்றுதல், தொடர்புடைய சாட்சியங்களை சேகரித்தல் ஆகியவற்றிற்கு வகை செய்ய இச்சட்டத்தில் போதிய அளவிற்கு விதிகள் இயற்றப்படலாம். இவ்வாறு செய்வது, இம் மாநிலத்தில் ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்கத்திற்கு அதன் அலுவலின் அடிப்படையில் ஒரு அந்தஸ்தையும், பொறுப்பையும் பெற்றுத் தரும். | " | " |
| 141 | இந்த அத்தியாயம் பத்திகள் – 23 மற்றும் 24–ல் பரிந்துரை செய்து உள்ளவாறு ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அதிகரித்த வீ தத்தில் சிறப்பு ஊதியம் மற்றும் சிறப்பு பதவி உயர்வு கொள்கை ஆகியவற்றை அமுல்படுத்தலாம். | " | " |
| 142 | ஒவ்வொரு துறையிலும் பி மற்றும் சி பிரிவு அலுவலர்கள் சம்பந்தமான ஒழுங்கு நடவடிக்கைகளை கவனிக்க ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட வேண்டும். | " | " |
| 143 | குறிப்பிட்ட வழக்குகளுக்கு ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்கத்தை சார்ந்த ஒரு அலுவலர் தாக்கல் செய்யும் அலுவலராக (Presenting | | |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | Officer) இருந்து தனிஅலுவலர் பரிசீலிக்கும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உதவி புரிய வேண்டும். | " | " |
| 144 | ஒழுங்கு நடவடிக்கை ஆணையர், அல்லது தனிஅலுவலராக நியமிக்க பொருத்தமான பதவியிலுள்ள அதிகாரிகள் கிடைக்காவிட்டால் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்க தகுந்த முன் அனுபவம் உள்ள ஓய்வு பெற்ற அதிகாரிகளை ஒப்பந்தம் முறையில் நியமிக்க பரிசீலிக்கலாம். அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சமயத்திற்குள் எத்தனை வழக்குகள் முடிக்க வேண்டும் என்ற அடிப்படையில் சம்பளம் அளிக்கலாம். | " | " |
| 145 | ஊழல் தடுப்பு – கண்காணிப்பு இயக்குநரை நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள வழக்குகளை மாநில விழிப்புப் பணி ஆணையர் முன் கொண்டு வர, சிறப்பு வழக்கறிஞர்களை நியமிக்க அனுமதிக்கலாம். | " | " |
| 146 | ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல் முறையீடு விதி 8–ன் கீழ் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அபராதம் ஒரு தண்டனைதான் என்று திருத்தம் வெளியிடலாம். வழக்குகளின் தன்மைக்கு ஏற்ப அபராத தொகையை அரசு நிர்ணயிக்கலாம். | " | " |
| 147 | மேலே கூறிய விதி 8–ல் காலமுறை சம்பள விகிதத்தில் குறைந்த நிலைக்கு குறைத்தல் (Reduction of Time Scale) சிறிய தண்டனையாக (Minor Penalty) வகைப்படுத்தலாம். | " | " |
| 148 | மேற்படி விதி 8–ன் கீழ் வரும் தண்டனைகள் ஆகிய பணியிலிருந்து நீக்குதல், பணியறவு செய்தல், கட்டாய ஓய்வு அளித்தல் ஆகிய தண்டனைகள், 1973–ஆம் ஆண்டு அரசு நன்னடத்தை விதி 19–ன் கீழ் 19 (2) ன் வரையறைக்கு உட்பட்டு வரும் ஊழல் குற்றச்சாட்டு மற்றும் அது சம்பந்தமான குற்றச்சாட்டுகளுக்கும் பொருந்தும் என்று அரசு எல்லாத் துறைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்புதல் வேண்டும். | " | " |

வருவாய்த் துறை

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | தற்போது பொதுமக்களுக்கு பல்வேறு அரசுத் துறைகளிடமிருந்து சான்றிதழ்கள் தேவைப்படுகின்றன. குறிப்பாக வருவாய்த் துறையில் பள்ளியில் சேர்க்கை, | சான்றிதழ்<br>1. பின்தங்கிய இடத்தின் | வழங்க வேண்டிய துறை<br>பொது மேலாளர் மாவட்ட தொழில் | பல்வேறு சான்றிதழ்கள் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஏற்கனவே |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேலைவாய்ப்பு வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெறுதல், ஈட்டுறுதி உரிமைத் தொகை, வாரிசுச் சான்றிதழ் பெற எனப் பலவகைக் காரணங்களுக்காக தேவைப்படுகின்றன. ஒரே நிறுவனத்தில் இத்தகைய சான்றிதழ் கொடுக்கும் அதிகாரம் குவிந்து இருப்பது ஊழல் பெருக வழிவகுக்கும். எனவே, இத்துறைகளோடு ஏனையத் துறைகளும் சில சான்றிதழ்களை அளிக்க அதிகாரம் அளிக்கலாம். ஒப்பு பெற்ற அதிகாரிகளுக்கும் இத்தகைய சான்றிதழ்கள் வழங்க அதிகாரம் அளிக்கலாம். | அடிப்படையில் தொழில் துவங்க அமைவிடச் சான்று (Location Certificate)<br>2. ஆதரவற்ற குழந்தைகளை (மாணவ மாணவியர்) அனாதை இல்லங்களில் சேர்க்க கைவிடப்–பட்டோர் சான்று.<br>3. ஆதரவற்ற விதவைச் சான்று.<br>4. கணவனால் கைவிடப்–பட்டோர் சான்று.<br>5. உயிருடன் இருப்பதற்கான சான்று.<br>6. விதவைச் சான்று.<br>7. திருமணம் ஆகவில்லை என்பதற்கானச் சான்று.<br>8. பள்ளிச் சான்றிதழ் காணாமல் போனால் அவற்றிற்கு மாற்றுச் சான்று (duplicate) | மையம்.<br><br>இந்தச் சான்றிதழ்களை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், நகரப் பஞ்சாயத்து செயல் அலுவலர், அல்லது நகராட்சி ஆணையர் வழங்கலாம். மாநகராட்சியைப் பொறுத்த வரையில் மாநகராட்சி ஆணையர் அல்லது மண்டல அலுவலர் (Zonal Officer) வழங்கலாம.<br><br>சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள். | ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |

தமிழ்நாடு TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | | மேலும் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கான சான்றிதழ்களை கூடிய அளவில் பொதுவான சான்றிதழ்களாக வழங்கி பல்வேறு திட்டங்களின் கீழ் ஏற்கத் தக்க வகையில் அமையுமாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். பழங்குடியினர் (எஸ்.டி) சாதிச் சான்றினை இனிமேல் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரும் வழங்கலாம். | " |
| 7. | இத்தகைய சான்றிதழ்களில் செல்லுபடிக்கான காலக்கெடுக்களை நீட்டிக்கப் பரிசீலிக்கலாம். | இப்பரிந்துரையை ஏற்கலாம். பிறப்புச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், குடியிருப்பு சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் முதலியவற்றை நிலையானதாகவே வழங்கலாம். வருமானச் சான்றிதழ்களை ஐந்து ஆண்டுகள் செல்லத்தக்க வகையில் வழங்கலாம். தேவைப்பட்டால் இத்தகைய சான்றிதழ்களை இடைப்பட்ட காலத்திலும் வழங்கலாம். | எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 8. | ஒரு குழந்தையின் பிறப்பு பற்றி பதிவு செய்யும்போது, கூடவே சாதி விவரங்களை பதிவு செய்யவும் அதிகாரம் அளிக்கலாம். இது ஒருவருக்கு நிலையான ஆவணமாக அவரது குழந்தை பருவத்திலிருந்து எல்லா காரணங்களுக்கும் அவரது வாழ்நாள் முழுவதும் சட்டப்படி செல்லுபடியாகக் கூடியதாக அனுமதிக்கலாம். | பிறப்பினை பதிவு செய்யும்போது சாதி விவரத்தை சரிபார்க்க இயலாது. எனவே, இப்பரிந்துரையை ஏற்று நடைமுறைப்படுத்த இயலாது. | ஏற்கப்படவில்லை. |
| 10. | கிராமப்புற மக்களுக்கு சில நலத்திட்டங்களில் சலுகைகள் வழங்குவதற்காகக் கேட்கப்படும் சில சான்றிதழ்களை மறுபரிசீலனை செய்து முடிந்தவரைக்கும் குறைத்து விடலாம். அல்லது சிலவற்றை வேண்டியதில்லை என்று ஒதுக்கிவிடலாம். | பரிந்துரை எண்.6 இல் எடுத்த முடிவின் படி இதனை ஏற்று நடைமுறைப்படுத்தலாம். | உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 11. | கிராமப்புற மக்களுக்காக முன்னேற்றத் திட்டங்களின் பயனாளிகளை கண்டுபிடித்து அவர்களுக்கு பயன்களை விநியோகிக்கும் அதிகாரத்தைப் பஞ்சாயத்துகளுக்கு விட்டு விடலாம். இருக்கும் உதவியின் எண்ணிக்கையை விட பயனாளிகளின் விண்ணப்ப எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் குலுக்கல் மூலம் பயனாளிகளை தேர்ந்தெடுக்கலாம். | இப்பரிந்துரையை ஏற்று நடைமுறைப்படுத்தலாம். | உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 12. | ஒவ்வொரு குடும்பத்திற்கும் அக்குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரின் பெயர், பிறந்த தேதி, சாதி, முதியோர் உதவித் தொகை மற்றும் விதவைக்கான உதவித்தொகை வழங்கப்பட்டதற்கான விவரங்களை குடும்ப அட்டையிலேயே குறிப்பிட்டு வழங்கலாம். | சாதி போன்ற விவரங்களை குடும்ப அட்டையில் குறிப்பிடுவது நடைமுறையில் பல சிக்கல்களை ஏற்படுத்தும். எனவே, இப்பரிந்துரையை ஏற்க இயலாது. | ஏற்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| 14. | அந்தந்த கிராமத்திலேயே அல்லது அதன் பக்கத்தில் வசிக்கும் நபர்களை மட்டும், அந்த இடத்திற்கு கிராம நிர்வாக அதிகாரியாக நியமிக்கலாம். இந்த நியமனமும் மூன்று அல்லது ஐந்து வருட ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கலாம். | ஒப்பந்த அடிப்படையில் கிராம நிர்வாக அதிகாரிகளை நியமிக்க இயலாது. இருப்பினும் அந்தந்த கிராமத்தில் சேர்ந்தவர்களை கிராம நிர்வாக அதிகாரிகளாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தந்த விதிகளை திருத்த வேண்டி இருக்கிறதோ அவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்து புதிய முறையில் கிராம நிர்வாக அதிகாரிகளை எதிர்காலத்தில் சேர்க்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். | வருவாய் நிருவாக ஆணையருடன் கலந்தாலோசித்து உரிய ஆணைகள் வெளியிடப்பட உள்ளன. |
| 15 | பஞ்சாயத்து தலைவர்களுக்கு கிராம நிர்வாக அதிகாரிகள் மேல், சிறிய அளவில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் வழங்கலாம். | கிராம நிர்வாக அதிகாரிகள் முழு நேர அரசு ஊழியர்கள். மேலும் இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தனியாக பணி விதிகள் உள்ளன. எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர்கள் இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க இயலாது. எனவே, இப்பரிந்துரையை ஏற்க இயலாது. | ஏற்கப்படவில்லை. |
| 32 | மாவட்டங்களில் முக்கிய பிரமுகர்கள் சுற்றுப்பயணம் செய்யும்போது தங்கும் இடம், போக்குவரத்து மற்றும் உணவு தொடர்பாக ஏற்படும் கூடுதல் செலவுகளை சமாளிக்க மாவட்ட நிர்வாகங்களுக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 43 | கிராம நிர்வாக விரிவாக்கம் மற்றும் அண்மையில் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து ஆட்சி முறை ஆகியவை பெருகி வரும் அலுவல்களை கவனிக்க புதிய மாநில குடிமைப் பதவி (Civil Post) என்னும் புதிய பதவியை தோற்றுவிக்கும் நிர்பந்தத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த குடிமைப் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனங்களை செய்யலாம். | அரசிற்கு மிக கூடுதலான செலவு ஏற்படும் என்பதால், இப்பரிந்துரையை ஏற்க இயலாது. | ஏற்கப்படவில்லை. |
| 48 | கிராம நிர்வாக அதிகாரி பதவிக்கு நபர்களை நியமனம் செய்யும் போது அவர்களுடைய கல்வித் தகுதி 12–ம் வகுப்புக்கு மிகாமல் இருக்க வேண்டும். மேற்படி பதவிக்கு உயர் கல்வித் தகுதி உடையவர்களை நியமனம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும். | அந்தந்த கிராமங்களை சேர்ந்தவர்களை நியமிக்க முடிவு செய்துள்ளதால், கல்வித் தகுதி 10–வது வகுப்பிற்கு குறையாமலும் 12–ம் வகுப்பிற்கு மிகாமலும் இருக்க வேண்டும். | தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத்தைக் கலந்தாலோசித்து ஆணைகள் வெளியிடப்பட உள்ளன. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 51(I) | நிலத்தை ஒப்படைப்பு செய்வதற்காக வட்டாட்சியரின் நிதி அதிகாரங்கள் ரூ.5,000 த்தில் இருந்து ரூ.25000 ஆக உயர்த்தப்படலாம். இந்த விஷயத்தில் கோட்டாட்சியரின் நிதி அதிகாரங்கள் ரூ.50000–க்கு உயர்த்தப்படலாம் மற்றும் மாவட்ட ஆட்சியரின் அதிகாரங்கள் ரூ.2 இலட்சத்திற்கு உயர்த்தப்படலாம். | கீழ்க்கண்டவாறு நில மதிப்பு வரம்பினை உயர்த்தலாம்.<br>வட்டாட்சியர் – ரூ.10000 வரை<br>வருவாய்<br>கோட்ட அலுவலர் ரூ.20000 வரை<br>மாவட்ட வருவாய்<br>அலுவலர் ரூ.50000 வரை<br>மாவட்ட<br>ஆட்சித்<br>தலைவர் ரூ. 2 இலட்சம் வரை<br>சிறப்பு ஆணையர் (ம) நில நிர்வாக ஆணையர் ரூ. 2,50,000 வரை<br>அரசு ரூ.2,50,0000 க்கு மேல். | எடுக்கப்பட்ட முடிவுகளின்படி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 51 (ii) | குத்தகை வழங்குவதற்கான தொகை மதிப்பு தற்போது நிலவும் நில மதிப்பிற்கு ஏற்றவாறு உயர்த்தப்படலாம். | கீழ்க்கண்டவாறு நில மதிப்பு வரம்பினை உயர்த்தலாம்.<br>வட்டாட்சியர் – ஆணை பிரப்பிக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டியதில்லை.<br>கோட்டாட்சியர் – ரூ.20,000 வரை<br>மாவட்ட ஆட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் – ரூ.50,000 வரை.<br>நில நிர்வாக ஆணையர்<br>ரூ 2 லட்சம் வரை<br>அரசு – ரூ.2 லட்சத்திற்கு மேல். | " |

தமிழ்நாடு TAMIL NADU GOVERNMENT
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| | | | |
|---|---|---|---|
| 51 (iii) | நிலம் கையகப்படுத்துவற்கான செயற் குறிப்புகள் ஒப்புதல் பெறுவதற்காக தற்போது அரசுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ரூ.1 கோடி வரையிலான இத்தகைய செயற் குறிப்புகள் மாவட்ட ஆட்சியர் அளவிலேயே முடிவு செய்யப்படலாம். அரசின் நிலையில் இப்பொருள் குறித்து முடிவு செய்வதற்கான அதிகாரம் நில நிர்வாக ஆணையரிடமே ஒப்படைக்கப் டலாம். | நில மதிப்பு வரம்பினை கீழ்க்கண்டவாறு உயர்த்தலாம்.<br>மாவட்ட ஆட்சியர் ரூ.25 இலட்சம் வரை<br>நில நிர்வாக ஆணையர் ரூ. 50 இலட்சம் வரை<br>அரசு – ரூ.50 இலட்சத்திற்கு மேல். | ஆணைகள் விரைவில் வெளியிடப்ப உள்ளன. |
| 51 (iv) | சைக்கிள்கள் கொக வலைகள் முதலியவை வாங்குவதற்காக முன் பணம் அனுமதித்தல் போன்ற சிறு இனங்கள் தொடர்பான நிதி ஆதாரங்கள் மாவட்ட ளவிலான அதிகாரிகளிடம் பிரித்து கொடுக்கப்படலாம். ஈட்டிய விடுப்பு, மருத்துவ விடுப்பு ஆகியவற்றிக்கு அனுமதி அளிக்கும் அதிகாரம், உள்ளூர் அலுவலங்களின் தலைவர்களிடம் பிரித்து கொடுக்கப் டலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 51 (v) | திரும்பி வசூலிக்க இயலாத நிலுவைத் தொகைகளை கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான தொகை வரம்புகள் பரிசீலிக்கப்பட்டு தற்போது நிலவும் ரூபாயின் மதிப்பிற்கு ஏற்ப தகுந்தவாறு உயர்த்தப்படலாம். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 52 | வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா சம்பந்தமாக உள்ள பதிவுகளை துணைப் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பதிவுகளோடு மாதம் ஒரு முறை ஒப்பிட்டு சரிபார்த்து, பட்டா மாற்றங்களை அன்றைய தேதி வரை சரி செய்ய வேண்டும். கோட்ட வருவாய் அலுவலர் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தாலுக்கா அலுவலக பதிவேடுகளையும், துணைப் பதிவாளர் அலுவலக பதிவேடுகளையும் ஒப்பிட்டுப் பார்த்து சரியாக உள்ளது என சான்று அளிக்க வேண்டும். | இம்முறை நடைமுறையில் உள்ளது. மேலும் சிறந்த முறையில் செயல்படுத்த சம்பந்தப்பட்ட மனுக்களில் முடிவு எடுக்க ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவை நிர்ணயித்து கோட்டாட்சியர் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர் அடிக்கடி ஆய்வு நடத்த வேண்டும். மாநில அளவில் இந்த செயல்பாட்டினை துறைத் தலைவர்கள் முறையாக ஆய்வு செய்து, மனுக்களின் மீது விரைவாக முடிவு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள து, தொடர் நடவடிக்கையாக முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். |
| 53 | பொதுப் பணிகளுக்காக கையகப்படுத்தும் நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு கொடுக்கப் படவேண்டிய தொகையை நிர்ணயம் செய்வதில் நடுவர் முடிவுக்கு (Arbitration ) விடுவது என்ற ஏற்பாட்டிற்கு சட்டத்தில் குறிப்பிட்ட மாற்றங்களை செய்யலாம். | இப்பரிந்துரையை ஏற்க இயலாது. தற்போது தொழில்களுக்கு நிலம் எடுப்பதற்காக கொண்டு வரப்பட்டுள்ள சட்டத்தை விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதில் உள்ள நடைமுறையை பின்பற்ற ஏனைய சட்டங்களிலும் வழிவகுக்கலாம். | ஏற்கப்படவில்லை. எனினும் சமீபத்தில் இயற்றப்பட்ட நிலம் கையப்படுத்துதல் குறித்த சட்டத்திற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் பெற்று ஆணைகள் வெளியிடப்படும். |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 54 | பொதுப்பணித் துறை நிர்வாக பொறியாளரின் பரிந்துரையின் பேரில், அரசு அலுவலகங்கள் செயல்படும் தனியார் கட்டிடங்களின் வாடகையை ஒரு வரையறுக்கப்பட்ட மதிப்பு வரையில் மாவட்ட ஆட்சியரே தீர்மானிக்கலாம். வரையறுக்கப்பட்ட மதிப்பிற்கு மேற்பட்ட நிகழ்வுகளில் வாடகையை அரசு முடிவு செய்யலாம். | இப்பரிந்துரையை ஏற்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மாத வாடகை ரூ.10,000 வரை, மாநாகராட்சியில் உள்ள கட்டிடங்களுக்கும், ஏனைய இடங்களில் உள்ள கட்டிடங்களுக்கு ரூ.5,000 வரை மாத வாடகை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கலாம். | ஆணைகள் வெளியிடப்பட உள்ளன. |
| 55 | அரசு பொது நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புப் படை போன்ற துறைகளுக்கு புதிதாக வேலைக்கு சேர்க்கப்படும் நபர்களின் முன் வரலாறு சரிபார்ப்பு சம்பந்தமான ஆவணங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் வழியாக வழக்கமாக அனுப்பப்படும் முறையினை மாற்றி, நேரிடையாக காவல் துறையினரே அவற்றை கையாளலாம். | மாவட்ட தலைமை அதிகாரியாக உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக அறிக்கை அனுப்புவதே சரியானது. எனவே, இப்பரிந்துரையை ஏற்க இயலாது. | தற்போதைய நடைமுறையே சரியானது என்பதால் பரிந்துரை ஏற்கப்படவில்லை; புதிய ஆணைகள் தேவைப்படவில்லை. |
| | | ஊரக வளர்ச்சித் துறை | |
| 13 | கிராம நிர்வாக அதிகாரி ஊராட்சி செயலாளராக பணிபுரிய அனுமதிக்கலாம். | தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் கீழ் ஊராட்சித் தலைவரை செயல் அலுவலராக ஏற்கனவே விளம்புகை செய்யப்பட்டுள்ளதால் இந்த பரிந்துரையை செயல் படுத்த இயலாது. | பரிந்துரை ஏற்கப்படவில்லை; ஆணைகள் ஏதும் தேவைப்படவில்லை. |
| 43 | கிராமப்புற நிர்வாக விரிவாக்கம் மற்றும் அண்மையில் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து ஆட்சி முறை ஆகியவை பெருகி வரும் அலுவல்களை கவனிக்க புதிய மாநில குடிமைப் பதவி (Civil Posts) என்னும் புதிய பதவியை தோற்றுவிக்கும் நிர்பந்தத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த குடிமைப் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனங்களை செய்யலாம். | பஞ்சாயத்து அமைப்புகளில் குடிமைப் பதவிகளை ஏற்படுத்தும் பரிந்துரையை செயற்படுத்த உள்ளாட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படும். ஏனவே, இந்த பரிந்துரையை செயற்படுத்த இயலாது. | பரிந்துரை ஏற்கப்படவில்லை |
| 49 | துணை ஆட்சியர் / கோட்டாட்சியரை ஊராட்சியின் ஆய்வாளராகவும், மாவட்ட ஆட்சித் தலைவரை ஊராட்சி ஒன்றியங்களின் ஆய்வாளராகவும், ஊராக வளர்ச்சி இயக்குநரை மாவட்ட ஊராட்சியின் ஆய்வாளராகவும் பதவி பெயரிடலாம். | தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி ஊராட்சிகளின் செயற்பாடுகளை ஆய்வு செய்பவர் மாவட்ட ஆட்சித் தலைவர் பதவிக்கு குறைவாக இருக்க கூடாது. எனவே, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ல் தற்போது உள்ள நிலையே போதுமானதாக உள்ள நிலையில் அவற்றிற்கு எந்த மாற்றமும் தேவை இல்லை. | தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம், 1994ல் ஏற்கனவே இதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன; எந்த மாற்றமும் தேவைப்படவில்லை. |
| 103 | 1996-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மூன்று அடுக்கு ஊராட்சிகள் அமைப்பை மாற்றி, 1958-ஆம் ஆண்டு முதல் 1996-ஆம் ஆண்டு வரை மிக நன்றாக இயங்கி வந்த இரண்டு அடுக்கு ஊராட்சி முறைக்க பொருந்துகிற | இரண்டு அடுக்கு ஊராட்சி அமைப்பு என்ற பரிந்துரையே இம்மாநில அரசின் கொள்கை ஆகும். இது தொடர்பாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு கடிதம் | அரசியல் நிர்ணயச்சட்டத்தில் உரிய மாற்றங்கள் கொண்டுவர மைய அரசை கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கி |

| | | | |
|---|---|---|---|
| | வகையில் மாற்றி அமைக்கப்படலாம். | அனுப்பி உள்ளார்கள். | றது. |
| 104 | பள்ளிகள், மதிய உணவு அளித்தல் மற்றும் சத்துணவு மையங்கள், பொதுச் சுகாதார நிலையங்கள், பொது விநியோக கடைகள் போன்ற அப்பகுதிகளில் உள்ளவற்றை மேற் பார்வை இடவும், தவறுகள் காணப்படுமாயின் அதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்கவும் ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். | சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் ஏற்கனவே அரசாணைகளின் வாயிலாக அதிகாரம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. ஏற்றுக் கொள்ளப்பட்டது. | ஆணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. |
| 105 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதிமேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள வேலைகளை செய்து முடிப்பதற்கு தக்க வழிகாட்டி விதிமுறைகளை முறையே மத்திய அரசும் மற்றும் மாநில அரசும் வெளியிட்டுள்ளன. சுய லாபத்திற்காக இந்தத் திட்டங்கள் தவறாக செயலாக்கப்படுவதை இந்த வழிகாட்டி விதிமுறைகள் குறிப்பாக தடுக்கின்றன. இந்த வழிகாட்டி விதிமுறைகளை அறிந்து விழிப்பாக இருந்து, திட்ட செயலாக்கத்தில் ஏற்படும் தவறுகளை தவிர்க்கும் பொருட்டு எல்லா ஊராட்சிகளின் கவனத்திற்கும் அவ்விதிகள் கொண்டு வரப்பட வேண்டும். | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சட்டமன்ற பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றிற்கான வழிகாட்டு விதிமுறைகளை அரசு ஏற்கனவே வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டு முறைகளை அனைத்து உள்ளாட் சி அமைப்புகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. | ஆணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன. |
| | | தகவல் தொழில் நுட்பத் துறை | |
| 150 | தலைமைச் செயலகத்தினை கணிப்பொறி மயமாக்குதல். | அரசு அலுவலகங்களில் கணினி மயமாக்குவதை அதிகரிப்பது தொடர்பாக நீதிபதி இராமானுஜம் குழு தெரிவித்த பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒரு புதிய தனித் துறை அதாவது தகவல் தொழில் நுட்பம் எனும் துறை, பொது (சிறப்பு – A) துறையின் 5.10.98 –ஆம் நாளிட்ட 1611 –ஆம் எண் அரசாணையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது | அரசு அலுவலகங்கள் கணினி மயமாக்கப்படுவதற்கு சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| | | வணிகவரித் துறை | |
| 16. | உண்மைகளை மறைத்தற்கான ஆதாரம் இருந்தால் மட்டும்தான் ("தனக்கு நியாயமென்றுபட்ட" விற்பனை வரிவிதிப்பு) வழங்கப்பட வேண்டும். அதுவல்லாது பொது லாப அடிப்படையில் தெளிவில்லாத தீர்ப்புரிமை அளவுகோல்களை வைத்து வழங்கக்கூடாது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 17. | ஒருங்கிணைந்த பலநோக்கு கொண்ட சோதனைச் சாவடிகளை வணிகவரி, குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் காவல்துறை ஆகிய பணிகளை கவனிக்க அமைக்கலாம். | ஏற்கனவே இது போன்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக்கொள்ளப்பட்டது. | ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 56. | பதிவு செய்ய வருவோர் அவர்களது ஆவணங்களை அவர்களே தயாரிக்க இயலும் வகையில் தெளிவான படிவங்களைத் துறை தயாரித்து வெளியிடலாம். இதனால் பெரும்பாலான நிகழ்வுகளில் மாமூல் வாங்கும் இடைத்தரகர்களாகவும், முகவர்களாகவும் செயல்படும் ஆவண எழுத்தர்கள் மற்றும் நகல் எழுத்தர்கள் ஆகியோரைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியம் எழாது. | நிலையான படிவத்தை உருவாக்க சட்டத்துறையுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஏற்றுக் கொள்ளப்பட்டது. | நிலையான படிவங்களை உருவாக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 57. | நிர்ணயிக்கப்பட்ட முத்திரைத்தாளுக்கான கட்டணத்தை வங்கி வரைவோலை மூலம் கொடுக்க வகை செய்து நடைமுறை விதிகள் மாற்றப்பட வேண்டும். இது முத்திரைத்தாள் தட்டுப்பாட்டினால் ஏற்படும் காலதாமதத்தையும், ஊழலையும் தடுக்கும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 58. | வழிகாட்டி பதிவேடுகள் தாராளமாக பொது மக்களுக்கு பார்வைக்குக் கிடைக்கப்பெற வேண்டும். வணிக சங்கங்கள் மூலம் விளம்பரத்தை விரிவுபடுத்தப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | வழக்கமான முறைகளுடன் கணினி இணையம் (இன்டர்நெட்) முதலிய பல்வேறு வழிகள் மூலம் விவரங்களை விளம்பரப்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 59. | பத்திரப் பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் தற்போது இயங்கி வரும் வழிகாட்டிப் பிரிவு, நில நிர்வாக ஆணையரால் நியமிக்கப்படும் வருவாய் அலுவலர்களை உள்ளடக்கி விரிவுபடுத்தப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | நில நிருவாக ஆணையருடன் கலந்தாலோசித்து ஆணைகள் வெளியிடப்பட உள்ளன. |
| 60. | முத்திரைத்தாள் சட்டம் பிரிவு 47–ஏ(1)ன் கீழ் நிலுவையில் இருக்கும் மதிப்பீட்டிற்கான வழக்குகளை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கூடுதல் அலுவலர்களை நியமித்து முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். | 1899–ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47ஏ–ன் கீழ் வரும் ஆவணங்களின் நிலுவையைக் குறைப்பதற்காக உருவாக்கப்பட்ட புதிய பணியிடங்களில் அமர்த்தப்பட்ட அலுவலர்களின் பணி ஆய்வு செய்யப்பட்டு, நிலுவையினைக் குறைப்பதற்கு புதிய வழிமுறைகளைக் கண்டறிந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. மேற்படி தேங்கி கிடக்கும் நிலுவையினை நிவர்த்தி செய்ய 20 துணை ஆட்சியர்கள் தற்பொழுது நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் முத்திரைச் சட்டம் பிரிவு 47ஏ–ன் கீழ் நிலுவையில் உள்ள இனங்களைக் குறைப்பதற்காக, சமாதான் திட்டம் என்ற ஒரு திட்டமும், உருவாக்கப்பட்டு வருகிறது. | இந்திய முத்திரைச் சட்ட விதி 47–A யின் அடிப்படையில் நிலுவையில் உள்ள ஆவணங்களின் எண்ணிக்கையைக் குறைக்க உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 61. | பத்திரப்பதிவுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மூலப் | நகலெடுக்கும் கருவிகள் படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. | அனைத்து சார்பதிவாளர் |

9/96—4

| | | | |
|---|---|---|---|
| | பத்திரங்களை நிழற்பட நகல் எடுக்கப்போதிய நவீன வசதிகள் செய்யப்பட வேண்டும். | | அலுவலகங்களுக்கும் நகலெடுக்கும் கருவிகள் வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 62. | பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணத்தில் சொத்து விற்பவர் மற்றும் வாங்குபவர் ஆகிய இரவரும் கையொப்பிடவும், அவர்களுடைய நிழற்படிவங்களை (photos), பதிவு செய்யும் அலுவலரால் உரிய முறையில் மேலொப்பமிட்டு அதே ஆவணத்தில் ஒட்டப்படவும் ஏதுவாக சட்டப்படியான விதிமுறைகள் திருத்தம் செய்யப்படலாம். செயல் உரிமை ஆவணம் (Power of Attorney) பெற்றவர்களால் பிரதிநித்துவம் அளிக்கப்படும்பொழுது கையொப்பம் பெறலாம் என்பதற்கு மட்டும் விதிகள் தளர்த்தப்படலாம். அந்நேர்வுகளிலும் கூட வாங்குபவர் அல்லது விற்பவரின் நிழற்படங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் ஒட்டப்பட வேண்டும். | சொத்துக்களை விற்பனை செய்பவர்களிடமிருந்து மட்டுமின்றி அவற்றினை வாங்குபவர்களிடமிருந்தும் கூட கையொப்பம்/பெருவிரல் ரேகை பெறப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. விற்பனை செய்பவர் மற்றும் வாங்குபவரின் நிழற்படத்தை ஒட்டுதல் அவசியமில்லை எனவும் முடிவு செய்யப்பட்டது. | சொத்துக்களை வாங்குவோர் விற்போர் இரு தரப்பினரும் கையொப்பம்/பெருவிரல் ரேகை வைக்க வேண்டும் என்பதற்கான ஆணை வெளியிடப்படுகிறது. |
| 78. | தவறிழைக்கும் சங்கங்களின் மீது நீவிர நடவடிக்கை எடுப்பதற்கு, 1975–ஆம் ஆண்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்திலுள்ள ஏனைய பிரிவுகளில் பதிவாளருக்குப் போதிய அதிகாரம் இருப்பதால், அந்தச் சட்டத்தின் பிரிவு 34–ஏ–யை நீக்கலாம். | தவறு இழைக்கும் சங்கங்களைச் சீர்படுத்தும் நோக்குடன் 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தில் 34–ஏ பிரிவு அண்மையில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் சட்டத்தின் பிரிவு 34ஏ–ல் உள்ள நிபந்தனைகளை விலக்கிக் கொள்ளத் தேவையில்லை என முடிவெடுக்கப்பட்டது. | ஏற்கப்படவில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுச் சட்டத்தில் விதி 34–ஏயை நீக்கத் தேவையில்லையென ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| | | சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை | |
| 20. | தனியார் நிலங்களில் சந்தன மரங்கள் வளர்த்தல் பற்றியது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசு ஏற்கனவே தேவையான திருத்தத்தை தமிழ்நாடு வனச்சட்டம் 1882–ல் கொண்டு வந்துள்ளது. இத்திருத்தம் குடியரசு தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. | 1882ஆம் ஆண்டைய தமிழ்நாடு வனச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர செயலாணை வெளியிடப்பட்டுள்ளது. விதிகளுக்கு திருத்தங்கள் விரைவில் கொண்டுவரப்படும். |
| | | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | |
| 21. | 1996–ம் ஆண்டு உரிமையியல் மேற்முறையீட்டு வழக்கு எண்.11646–11724ல் உச்சநீதிமன்ற தீர்ப்பாகிய, அரசு நிறுவனங்களில் வேலைக்கு ஆள் எடுக்கும்போது, வேலை வாய்ப்பகத்திற்கு வெளியேயிருந்தும், விண்ணப்பத்திருந்தால் எடுக்கலாம் என்று | தற்போது நடைமுறையிலுள்ள திட்டத்தை அதாவது வேவைாய்ப்பு அலுவலகங்களிலிருந்து மட்டும் தேவையான நபர்களை பரிந்துரை செய்து அதன்படி பணியில் நியமிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. மேலும், தற்போது கூட்டுறவு, உள்ளாட்சி மற்றும் கல்வித் துறைகளுக்கு நீங்கலாக மற்ற துறைகளுக்கு உள்ள 1:20 என்ற | கூட்டுறவு, உள்ளாட்சி அலுவலங்கள் மற்றும் கல்வித்துறைகள் தவிர ஏனைய அலுவலகங்களுக்கு ஒரு காலியிடத்திற்கு 5 நபர்கள் |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | குறிப்பிட்டிருப்பதை எல்லாத் துறைகளுக்கும் அரசு ஒரு சுற்றறிக்கை மூலம் தெரியப்படுத்தலாம். | விகிதாசாரத்தை 1:5 என்ற விகிதாசாரத்தில் அதாவது ஒரு பணியிடத்திற்கு 5 நபர்களை அழைத்து அப்பணியிடத்தை பூர்த்தி செய்யலாம் என்றும் மேலே சொல்லப்பட்ட 3 துறைகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசாரத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்தலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. | என்ற வகையில் அழைத்து பணியிடத்தைப் பூர்த்தி செய்ய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| | | தொழில் துறை | |
| 22. | பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் பஞ்சாயத்து செயலர்களுக்கு, கனிமப்பொருட்களை தகுந்த ஆதாரமின்றி எடுத்துச் செல்லும் வாகனங்களை தடுத்து நிறுத்தவும் பின்னர் பக்கத்திலுள்ள கனிம, வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் அளிக்கவும் அதிகாரம் வழங்கலாம். கனிமத்திற்கான எல்லா சலுகைகளும் பகிரங்க ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல நடைமுறைகள் மூலம் கொடுக்கலாம். | 2.198 நாளிட்ட தொழில்துறை ஆசாணை (பல்வகை) எண்கள்.3, 4 மற்றும் 5ல் ஏற்கனவே சிறு கனிம நிருவாக பொறுப்பை உள்ளாட்சி அமைப்புகளிடம் வழங்கி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, பரிந்துரை எண்.22ன் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை. | ஏற்கனவே நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது; புதிதாக ஆணைகள் தேவைப்படவில்லை. |
| 23. | மாவட்ட அளவில் கனிமப் பொருட்களுக்கான சலுகைகள் கேட்டு வரும் விண்ணப்பங்கள் மீது ஆணை பிறப்பிக்க ஒரு குறிப்பிட்ட கால அளவு நிர்ணயிக்கப்படல் வேண்டும். அதுபோலவே மண்ணியல்-சுரங்கவியல் இயக்ககம் மற்றும் அரசு ஆகியவற்றிற்கும் கால அளவு நிர்ணயிக்கப்படல் வேண்டும். | பின்வரும் காலவரையறை ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:-<br>(1) கிராணைட் குவாரி குத்தகை வேண்டி பெறப்பட்ட விண்ணப்பங்களின் மீது மாவட்ட ஆட்சியர் இறுதி நடவடிக்கை எடுத்தல்----30 நாட்கள்.<br>(2) கிராணைட் குவாரி குத்தகை வேண்டி பரிந்துரைகளுடன் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது அரசு ஆணை பிறப்பித்தல்----30 நாட்கள். | ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. |
| 24. | மண்ணியல் மற்றும் சுரங்கவியல் இயக்குநர் அவர்களுக்கு பட்டா நிலத்தில் கனிமம் எடுக்கும் உரிமங்கள் வழங்க அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். | பட்டா நிலங்களில் கிராணைட் குத்தகை வழங்கும் அதிகாரம் அரசிடமே தொடர்ந்து இருக்கலாம். | ஏற்கப்படவில்லை. ஆதிகாரம் அரசிடமே இருக்கலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. |
| | | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | |
| 25. | அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு சக்கர நாற்காலி, தள்ளு வண்டிகள், தூக்குப் படுக்கைகள், படுக்கைகள் சரிசெய்தல் மற்றும் இதுபோன்ற வேலைகளைச் செய்வதற்கு தனியாரிடம் ஒப்பந்த அடிப்படையில் விடலாம். பக்கத்தில் உள்ள தானாக | இத்திட்டத்தினை ஒரு முன்னுதாரண முயற்சியாக முதலில் சென்னையிலுள்ள அரசு புறநகர் மருத்துவமனைகளில் செயல்படுத்தலாம். இத்திட்டம் எவ்வித குழப்பமும் இடர்பாடுமின்றி வெற்றி பெறின் பின்னர் அரசு பெரிய மருத்துவமனைகளில் செயல்படுத்தலாம். | சென்னைப் புறநகர் மருத்துவமனைகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட ஆணைகள் |

| | | | |
|---|---|---|---|
| | முன்வரும் சமூக நல அமைப்புகளுக்கு அதனை மேற்பார்வையிடும் பணியைச் செய்ய அனுமதிக்கலாம். அவ்வாறு செய்தால் நோயாளிகளை பொறுப்புடனும், ஆர்வத்துடனும் கவனிப்பார்கள். | | வெளியிடப்பட்டுள்ளன. நன்முறையில் செயல்படுத்தப்பட்டால் ஏனைய பெரிய மருத்துவமனைகளிலும் செயல்படுத்தப்படும். |
| 26. | அரசு அல்லாத அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது வாழ்க்கையில் மரியாதைக்குரிய பெரியவர்கள் ஆகியோர்களைக் கொண்ட மருத்துவமனை ஆலோசனைக் குழு அமைத்து அவ்வப்போது மருத்துவமனையை அவர்கள் பார்வையிட்டு குறைபாடுகளை மருத்துவமனைத் தலைமைக்கு எடுத்துரைக்கவும், அவைகளைக்களைய வழிவகைகளை ஆராய்ந்து கருத்துக் கூறவும் அதிகாரமளிக்கலாம். | ஏற்கனவே அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மருத்துவமனை ஆலோசனைக் குழுக்கள், உயர்மட்டக் குழுவின் ஆலோசனை அடிப்படையிலேயே செயல்பட்டு வருகின்றன. | ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. தொடர்ந்து அவ்வாறே செயல்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| | | உயர்கல்வித் துறை | |
| 4(1) (அ) 74(I) | கலை மற்றம் அறிவியல் கல்லூரிகள் தொடங்க அரசின் அனுமதி தேவையில்லை. | புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைப்பதற்கு அரசின் அனுமதி அளிப்பது என்ற தற்போதைய நடைமுறை வழக்கத்தை தொடர்ந்து கடைபிடிக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. | தற்போதைய நடைமுறையையே பின்பற்ற முடிவெடுத்துள்ளதால் புதிதாக ஆணைகள் தேவைப்படவில்லை. |
| 4(1) 74 | தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) சட்டம் 1976–ஐ திருத்தலாம். | தனியார் கல்லூரி ஒழுங்காற்று சட்டம்1976னை திருத்தத் தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. தற்போதுள்ள வழக்கத்தையே தொடரலாம். | " |
| 4(1) (எ) 74 (iv) | அரசு உதவி பெறும்/பெறாத தனியார் கல்லூரிகளில் ஆசிரியர் நியமனங்களில் அரசு அனுமதியின்றி நிறுவன மேலாண்மைகளே மேற்கொள்ளலாம் என பரிந்துரைத்துள்ளது. | அரசு உதவி பெறும் கல்லூரிகள், இட ஒதுக்கீட்டு விதிகளைப் பின்பற்றி தகுதியான நபர்களை மட்டும் நியமிப்பதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணி இடங்களுக்கு நியமனம் செய்யும் தற்போதைய நடைமுறையில் அதற்குரிய ஒப்புதலளிக்கும் தகுதியுடை அதிகாரம் பெற்றவர்களின் ஒப்புதல் தேவை. எனவே தற்போது நடைமுறையில் உள்ள வழக்கமே தொடரலாம் என முடிவு செய்யப்பட்டது | " |
| 4(1) (ஏ) | அரசின் முன் அனுமதியை பெறுவதற்கு பதிலாக கல்லூரி மேலாண்மையினரே தனது ஊழியர்களுக்கு அதிகபட்ச தண்டனையான பணி நீக்கம், பணி இறக்கம், பணி அறவு போன்ற தண்டனைகளை வழங்கலாம் என குழு பரிந்துரைத்துள்ளது. | கல்லூரிக் கல்வி இயக்குநரிடம் மேல் முறையீடு அதிகாரம் உள்ளதால் கல்லூரி மேலாண்மையினர் ஊழியர்களுக்கு அதிக பட்ச தண்டனையாக பணி நீக்கம், பணியிறக்கம், பணியறவு போன்ற தண்டனைகளை சம்பந்தப்பட்ட தகுதியான அதிகாரம் பெற்றவரின் முன் அனுமதியின்றி வழங்கலாம் என்ற குழுவின் பரிந்துரையினை ஏற்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. | குழுவின் பரிந்துரையினை ஏற்று உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 4(3) | பல்கலைக்கழக அமைப்புகளில் அரசு உதவி/அரசு உதவி பெறாத கல்லூரிகள் பங்கேற்க பரிந்துரைத்துள்ளது. | அரசு நிதி உதவி மற்றும் நிதி உதவி பெறாத தனியார் கல்லூரிகளில் பல்கலைக்கழக செனட் மற்றும் சிண்டிகேட் ஆகிய அமைப்புகளில் போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீது அரசு ஏற்கனவேபல்கலைக்கழக சட்டத்தினை திருத்த பரிசீலிப்பதால் குழுவின் பரிந்துரையை ஏற்கலாம். | பல்கலைக்கழக சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. |
| 9(1) | மதிப்பெண்களை மறுசூட்டல் செய்வது போல மறு மதிப்பீடு செய்வதற்கும் விதிகள் நிர்ணயிக்க வேண்டுமெனவும், தேர்வு நடைமுறைகளில் தொடர்புடைய ஊழியர்களை கட்டுப்படுத்தவும், மேற்கொள்ளவும் இயல வேண்டுமெனவும் குழு பரிந்துரைத்துள்ளது. | விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்வதற்கும், பணியாளர்களை ஒழுங்காக கட்டுப்படுத்துவதற்கும், பல்கலைக்கழகங்கள் தகுந்த விதிகளையும் வழிகாட்டு நெறிமுறைகளையும் இயற்ற வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இந்த பரிந்துரையை ஏற்கலாம் என முடிவெடுக்கப்பட்டது. அனைத்து பல்கலைக்கழகங்களிலும் மறு கூட்டல் செய்வதற்கான வழிவகைகள் ஏற்கனவே உள்ளன. | பல்கலைக்கழகங்களுடன் கலந்தாலோசித்து உரிய ஆணைகள் வெளியிடப்பட உள்ளன. |
| 10. | கல்லூரி முதல்வர்கள் மற்றும் விரிவுரையாளர்களை நியமிக்கும், இடம் பெயர்வு செய்யும் அதிகாரத்தை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு வழங்கலாம். | கல்லூரி முதல்வர்கள் தவிர பணியாளர்களின் பணிமாற்றம் மற்றும் பணி நியமனம் செய்வது முதலிய அதிகாரத்தினை மீண்டும் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கே வழங்கலாம் என்ற குழுவின் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. கல்லூரி முதல்வர்கள் பணிமாற்றம் மற்றும் பணிநியமனம் முதலிய அதிகாரம் தொடர்ந்து அரசிடமே இருக்கும். | உரிய ஆணைகள் வெளியிடப்பட உள்ளன. |
| 11. | தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் 34ஏ பிரிவு படி ஒரு சங்கத்தின் நிருவாக குழுவினை கலைப்பதற்கு காரணங்கள் மேலோட்டமானதாக இருப்பினும் ஏதேனுமொரு காரணத்தால் பதிவு செய்யப்பட்ட சங்கத்தை கலைக்க அரசு கடும் அதிகார வாம்பு பெற்றுள்ளதால் நீண்ட காலமாக நன்முறையில் நிருவாகம் நடத்தி பாரம்பரியப் பெருமையுடன் விளங்கும் சங்கங்கள் நடத்தி வரும் கல்வி நிறுவனங்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளதால், இச்சட்டத்தின் 34-ஏ பிரிவை ரத்து செய்ய குழு பரிந்துரை செய்கிறது. | தவறு இழைக்கும் சங்கங்களைச் சீர்படுத்தும் நோக்குடன் 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தில் 34-ஏ பிரிவு அண்மையில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் சட்டத்தின் பிரிவு 34ஏ-ல் உள்ள நிபந்தனைகளை விலக்கிக் கொள்ளத் தேவையில்லை என முடிவெடுக்கப்பட்டது. | பரிந்துரை ஏற்கப்படவில்லை. |
| 28. | பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது சேர்க்கப்பட்ட மாணவர்களின் பெயர், பெற்ற மதிப்பெண் விவரங்களை வெளியிட வேண்டும். இது மதிப்பெண் வாரியாக தகுதியான மாணவர்களுக்கு இடம் கிடைக்கிறதா என்று சரிபார்க்க உதவும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கைக்கான விதிமுறைகள் 20.3.98 நாளிட்ட அரசாணை நிலை எண்.55ல் ஏற்கனவே வெளியிடப்பட்டு அவை கடுமையாக பின்பற்றப்படுகிறது. | உரிய ஆணைகள் வெளியிடப்பட்டு விதிமுறைகள் கடுமையாக பின்பற்றப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| 4(1)(ஈ)<br>74 (v) | தொழிற்கல்வி<br>பல்கலைக்கழகம் அல்லது சட்டபூர்வக் குழுவின் அங்கீகாரத்திற்கு முன்பாகவோ அல்லது அதை எதிர்நோக்கியோ, மாணவர் சேர்க்கையைத் தடை செய்யச் சட்டத்தில் வலியுறுத்தப்பட வேண்டும். | பல்கலைக்கழகம் (அ) சட்டபூர்வ குழுவின் அங்கீகாரத்திற்கு முன்பாகவோ, (அ) அதை எதிர்நோக்கியோ மாணவர்கள் சேர்க்கையை தடைசெய்ய பல்கலைக்கழகச் சட்டம் மற்றம் அகில இந்திய தொழில் நுட்ப குழுமச்சட்டம் ஆகியவற்றில் வழிமுறை உள்ளதால் இந்த விதிமுறைகளை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. | விதிமுறைகளை கண்டிப்பாக நடைமுறைபடுத்த உரிய ஆணைகள் விரைவில் வெளியிடப்பட உள்ளன. |
| 4(1)(உ)<br>74 (iii) | இப்பிரச்சினையில், உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, படிப்புக்கட்டணத்தை தீர்மானிப்பது, கட்டாய நன்கொடை/நன்கொடைக் கட்டணம் வசூலிப்பதை தடுத்து நிறுத்துவது முதலியவற்றிற்கு அரசு அதன் கட்டுப்பாடு அதிகாரத்தை வைத்திருக்கும். | உச்சநீதி மன்றம் மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளுக்கிணங்க படிப்புக் கட்டணம் தீர்மானிப்பது, கட்டாய நிதி வசூல்/நன்கொடை முதலியனவற்றை தடுக்க தேவையான அரசு அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும். என்ற குழுவின் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டது. | பரிந்துரையை நடைமுறைப்படுத்த ஆணை வெளியிடப்ப உள்ளது. |
| 4(1) (ஊ)<br>74 (iii) | கல்லூரிகள், சேர்க்கை விண்ணப்ப படிவத்திலேயே, செலுத்த வேண்டிய கல்விக்கட்டணம் மற்றும் அரசால் நிர்ணயிக்கப்பட்ட கல்விசாரா பணிகளுக்கான, எனைய கட்டணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டுமென, கட்டாய நன்கொடைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விதிகளை வகுக்கலாம். விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படாத எந்தவொரு கட்டணத்தை வசூலிப்பதையும், அல்லது எந்தவொரு நன்கொடை வசூலிப்பதையும் தடை செய்யவேண்டும். | குழுவின் பரிந்துரையை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது. கட்டாயப் படிப்புக்கட்டணத் தடைச் சட்டத்தின்படி அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துடன் கூடுதலாக கல்விசார்ந்த மற்றும் கல்விசாராத பணிகளுக்காக வசூலிக்கப்படும் கட்டணங்கள் அனைத்தும் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப்படிவம்/விவரக் குறிப்பீடு ஆகியவற்றில் கல்லூரிகளால் குறிப்பிடப்பட வேண்டும் என 6.6.97 நாளிட்ட உயர்கல்வித்துறை அ.எண்.304ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மாணவர்களிடம் நன்கொடை வசூலிக்கும் விதத்தில், விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடாத எந்தத் தொகைகளையும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கக் கூடாது எனத் தடை செய்து ஏற்கனவே வரைமுறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. | விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்படாத எந்தத் தொகையையும் வசூலிக்கத் தடை செய்யும் வகையில் ஏற்கனவே ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. |
| 4(1) (எ)<br>74 (iv) | அரசு உதவி பெறும் அல்லது உதவி பெறாத தனியார் கல்லூரிகளின் நிருவாகம், தான் செய்யும் ஒவ்வொரு நியமனத்திற்கும் அரசிடமிருந்து ஒப்புதல் பெறாமல் ஆசிரியர், ஆசிரியரல்லாத ஏனைய பணியாளர்களை நியமிக்க அதிகாரம் உடையதாக இருக்க வேண்டும். ஆனால், இடஒதுக்கீடு அது தொடர்புடைய விஷயங்கள் குறித்தும் அரசின் கொள்கைக்கிணங்க நியமனங்கள் அனைத்தும் செய்யப்படும். சட்டப்படிக்கான விதிகள், விதிமுறைகள் ஆகியவற்றை மீறி செய்யப்பட்ட நியமனத்தை செல்லாத தாக்குவதற்கான அதிகாரங்களை அரசு தானே வைத்துக்கொள்ளலாம். | அரசு உதவி பெறும் கல்லூரிகள், இடஒதுக்கீட்டு விதிகளைப் பின்பற்றி தகுதியான நபர்களை மட்டும் நிமிப்பதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணி இடங்களுக்கு நியமனம் செய்யும் தற்போதைய நடைமுறையில் அதற்குரிய ஒப்புதலளிக்கும் தகுதியுடைய அதிகாரம் பெற்றவர்களின் ஒப்புதல் தேவை. எனவே தற்போது நடைமுறையில் உள்ள வழக்கமே தொடரலாம் என முடிவு செய்யப்பட்டது. | அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு விதிகளைப் பின்பற்ற தற்போது உள்ள வழக்கமே தொடரலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளதால் புதிதாக ஆணைகள் தேவைப்படவில்லை. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 4(i) (எ)<br>74 (iv) | அரசு உதவிபெறும் அல்லது உதவி பெறாத தனியார் கல்லூரிகளின் நிருவாகம் அரசிடமிருந்து முன் அனுமதி பெறாமல், ஆசிரியர், ஆசிரியர் அல்லாத ஏனைய பணியாளர்களின் மீது ஒழுங்கு முறை கட்டுப்பாடு செலுத்த அதிகாரம் உடையதாக இருக்கவேண்டும். நிருவாகம் பிறப்பித்த பணிப்பறவு/பணி நீக்கம்/பணமிலிருந்து ஒய்வு பெறல் போன்ற முக்கிய தண்டனை வழங்கிய ஆணைகளை குறித்து செய்து கொள்ளப்படும் மேல் முறையீடு தொடர்பாக மட்டுமே அரசுக்கு அதிகாரம் அளிக்கப்படலாம். | தொழில்நுட்ப கல்வி இயக்குநரே மேல்முறையீட்டு அதிகாரம் பெற்றவராக இருப்பதால், கல்லூரி மேலாண்மையினர் தகுதியுடைய அதிகாரம் பெற்றவரின் முன் அனுமதியின்றி பணியாளர்கள் மீது அதிக தண்டனையான பணிநீக்கம், பணி இறக்கம், பணிபறவு முதலியனவற்றை அளிக்கலாம் என்ற பரிந்துரை ஏற்கப்பட்டது. | சட்ட நுணுக்கங்களைக் கருத்தில்கொண்டு உரிய ஆணைகள் விரைவில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | | பள்ளிக்கல்வித் துறை | |
| 2. | அரசு அலுவலகங்களில் அளிக்கப்படும் விண்ணப்பங்களில் குறியீட்டு எண் அளித்தல் ஏற்பளிப்பு அளித்தல் ஆகியவை கடைபிடிக்கப்பட வேண்டும். | இந்தப் பரிந்துரையைச் செயல்படுத்தலாம். பள்ளிக் கல்வித்துறையில் பொதுமக்களுக்கு விண்ணப்பங்கள் அளிக்கும்போது இந்த நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும். | பரிந்துரையை நடைமுறைப்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |
| 28. | பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கும்போது, சேர்க்கப்பட்ட மாணவர்களின் பெயர் மதிப்பெண் போன்ற விவரங்களை வெளியிட வேண்டும். | பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இப்பரிந்துரையின்படி சேர்க்கப்படுகிற மாணவர்களின் மதிப்பெண் பட்டியல் பள்ளிகளில் வெளியிட வேண்டும். | " |
| 75. | அரசு அனுமதி பெறாமல் தனியார் பள்ளிகள் திறக்க அனுமதி வழங்க வேண்டும். | அரசு பள்ளிகள் பரவலாக இருப்பது குறித்தும், சில கொள்கைகளுக்கேற்பவும் அமைக்கப்பட வேண்டுமென்று கருதப்படுகிறது. இத்தகைய கோட்பாடுகளை மீறிப் பள்ளிகள் திறக்கப்படுவது பொது நன்மைக்கு ஏற்றதல்ல. ஆகவே இந்தப் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. | பரிந்துரை ஏற்கப்படவில்லை. |
| 76. | அரசு முன் அனுமதி பெறாமல் பணியாளர்கள் நியமனம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முழு அதிகாரம் வழங்கப்படலாம். | அரசு உதவி பெறும் நிறுவனங்களுக்கு மட்டுமே இத்தகைய கட்டுப்பாடு இருக்கின்றது. அரசு உதவி பெறாத நிறுவனங்கள் நியமனங்களுக்கு அரசின் அனுமதி பெறத் தேவையில்லை. அரசு உதவி பெறும் நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஊதியம் முழுமையும் அரசே ஏற்றுக்கொள்வதால், அவர்கள் அரசு ஆசிரியர்களுக்கு இணையாக கருதப்பட வேண்டும். ஏற்கனவே உள்ள ஆசிரியர் மரணமுற்றாலும், ஒய்வு பெற்றாலும் இந்த இடத்தை ஒரு மாத காலத்திற்குள் நிரப்பிக் கொள்ள அனுமதி வழங்கப்பட வேண்டும். ஒரு மாத காலத்திற்குள் அரசு முடிவு தெரிவிக்கப்படாவிட்டாலும் நிர்வாகம் புதிய நபரை தேர்ந்தெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். எனினும், மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப நிரப்புதல், இனவாரி சுற்று கடைப்பிடித்தல், | மீதமுள்ளவை ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | தகுதிக்கேற்ப நியமனம் செய்தல் போன்ற முக்கியமான நெறிமுறைகள் கடைப்பிடிக்க வேண்டியுள்ளதால் நியமனம் செய்வதற்கு முன் அனுமதி பெறவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. | |
| 77. | தேர்வு முறைகளின் மாற்றங்கள் | குழு பரிந்துரைத்துள்ள, தேர்வு வாரியத்தை நான்காக பிரிப்பது போன்ற கருத்துக்களில் சில சிக்கல்கள் ஏற்படலாமென உயர்கல்வி, உயர்நிலைக் குழு கருத்து தெரிவித்த நிலையில் இப்பரிந்துரைகள் ஏற்கப்பட வேண்டாமென முடிவு செய்யப்பட்டது. மறு மதிப்பீடு செய்வதிலும் நடைமுறைக்கேற்றவாறு இயலாது என சென்னை உயர்நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் முடிவு தெரிவித்துள்ள நிலையில் தற்போதுள்ள நிலை தொடரலாமென முடிவு செய்யப்பட்டது. | தற்போதுள்ள நிலை தொடரலாம் என்பதால் ஆணைகள் ஏதும் தேவைப்படவில்லை. |
| 79. | பாடப்புத்தகங்கள் தனியார் வெளியீடு | தமிழ்நாடு முழுவதும் ஒரே தரமான விலைகுறைவான புத்தகங்களைத் தற்போது அச்சிட்டு வழங்க இயலுகிறது. தரமான புத்தகங்களைத் தயாரிப்பதில் நடவடிக்கைகள் எடுத்து தற்போதுள்ள முறைகளை தொடர்ந்து கடைபிடிக்கலாமென தீர்மானிக்கப்பட்டது. | தற்போதுள்ள நிலையே தொடரலாமென ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 104. | பள்ளிகள் மேற்படிப்பு குறித்து ஊராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் வழங்குதல். | ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்குதல், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு ஒளிக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் குறித்து அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டு 11.6.97 தேதியிட்ட அரசு ஆணை 248 ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. | ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. |
| | | உள்துறை | |
| 40. | காவல்துறை<br>தூய்மையான, திறமையான நிர்வாக அமைப்பு சட்டத்திற்கு பொதுவான மதிப்பளித்து, ஒழுக்கம் மற்றும் சமூகக் கட்டுப்பாடு நிறைந்த சமுதாயத்தில்தான் அமையும். ஊழல் தடுப்பின் ஒரு பகுதியாக அரசு, காவல்துறை அமைப்பை தேசியகாவல் ஆணையக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சீரமைத்தல் வேண்டும், இதற்காக, ஒரு சிறிய செயற்குழுவை சீரமைப்பு கொண்டு வருவதற்கான வழிவகைகளைக் கண்டறியும் பொருட்டு உள்துறையில் உடனே அமைத்தல் வேண்டும். | தேசிய காவல் ஆணையத்தின் 54 பரிந்துரைகளில் 51 பரிந்துரைகள் மீது அரசு ஏற்கனவே முடிவெடுத்துவுள்ளதை அமைச்சரவை குறித்துக் கொண்டது. இந்த 51 பரிந்துரைகளில் 23 பரிந்துரைகள் ஏற்கனவே தமிழ்நாடு காவல் துறையில் அமுலில் இருந்து வருகிறது. எனவே இவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்பட்டது. 1989 முதல் 1995 வரையில் 5 பரிந்துரைகள் அமல் படுத்தப்பட்டன. 1996 ஜூன் மாதம் முதல் 1998 டிசம்பர் மாதம் வரையிலும் 20 பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. 3 பரிந்துரைகள் அமல்படுத்தத் தேவையில்லை என முடிவெடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 பரிந்துரைகளில் ஒன்று காவல் துறை சம்பந்தப்பட்டது அல்ல. ஏனினும் இவை *மற்றும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. நிலுவையில் உள்ள* இம்மூன்று பரிந்துரைகளின் மீது விரைந்து முடிவெடுக்க அமைச்சரவை வலியுறுத்தியுள்ளது. | நிலுவையில் உள்ள மூன்று பரிந்துரைகள் மீது விரைவில் ஆணைகள் வெளியிடப்பட உள்ளன. |
| 63. | மாநில காவல்துறையின் பணிகளை மேற்பார்யைட தேசிய காவல்துறை ஆணையம் பரிந்துரைத்துள்ளபடி, மாநில பாதுகாப்பு ஆணையம் ஒன்றை சட்டப்பூர்வமான | தற்போதுள்ள அமைப்பு முறையே திருப்திகரமாக செயல்படுவதால் இப்பரிந்துரையை அமைச்சரவை ஏற்கவில்லை. | பரிந்துரை ஏற்கப்படவில்லை. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | அங்கமாக ஏற்படுத்தலாம். இம்மாநில பாதுகாப்பு ஆணையம், காவல்துறையின் தலைமைப் பொறுப்பு வகிக்க வேண்டுமென குறிப்பிட்டு, காவல்துறைச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரலாம். | | |
| 64. | மாநில பாதுகாப்பு ஆணையத்தின் தலைவராக முதலமைச்சரும், ஏனைய ஆறு உறுப்பினர்களில் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினரும், முக்கிய எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரும் தவிர, சிறந்த கல்வியாளர்கள், ஒய்வு பெற்ற நீதிமன்ற உறுப்பினர் அல்லது மூத்த அதிகாரிகள் ஆகியோரும் அரசால் நியமனம் செய்யப்படுவார்கள். நியமிக்கப்படுபவரில் ஒருவர் பெண் உறுப்பினராக இருக்க வேண்டும். | தற்போதுள்ள அமைப்பு முறையே திருப்திகரமாக செயல்படுவதால் இப்பரிந்துரையை அமைச்சரவை ஏற்கவில்லை. | " |
| 65. | இதுபோல், மாவட்ட அளவில் காவல்துறை நடவடிக்கைகளை ஆய்வு செய்ய, ஒரு மாவட்ட பாதுகாப்புக் குழுவினை அம்மாவட்ட ஆட்சியாளரை தலைவராகவும், காவல்துறைக் கண்காணிப்பாளரை உறுப்பினர் செயலராகவும் மற்றும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள், ஒய்வு பெற்ற நீதிபதிகள் அல்லது மூத்த அதிகாரிகள் அல்லது சிறந்த கல்வியாளர்கள் அல்லது மாவட்டத்திலேயே வசிக்கும் சக ஊழியர்கள் ஆகியோரில் ஐவரையும் உறுப்பினர்களாகவும் நியமித்து உருவாக்கலாம். இக்குழு குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை கூடி காவல் துறையினருக்கு எதிராக அளிக்கப்படும் பொதுமக்களின் புகார்களைப் பரிசீலிக்கலாம். இக்குழு மாவட்டத்திலுள்ள காவல்துறையின் பணிகளை மறு ஆய்வு செய்ய உதவும். | தற்போதுள்ள அமைப்பு முறையே திருப்திகரமாக செயல்படுவதால் இப்பரிந்துரையை அமைச்சரவை ஏற்கவில்லை. | தற்போதைய அமைப்பு முறையே திருப்திகரமாக செயல்படுவதால் பரிந்துரை ஏற்கப்படவில்லை. |
| 66. | தேசிய காவல்துறை ஆணையத்தின் பரிந்துரையின்படி காவலர் கைது செய்யும் நடவடிக்கைக்கு விதிமுறைகளை ஏற்படுத்தலாம். | தற்போதுள்ள அமைப்பு முறையே திருப்திகரமாக செயல்படுவதால் இப்பரிந்துரையை அமைச்சரவை ஏற்கவில்லை. | " |
| 67. | முதல் தகவல் அறிக்கையை பதிவ செய்ய புகார் நிலையம் ஏற்படுத்தி, அங்கிருந்து புகாரின் மீது புலனாய்வு நடத்த காவல் நிலையத்திற்கு அனுப்ப வகை செய்யலாம். | இப்பரிந்துரையை அமல்படுத்த தேவையான ஆணைகளை உரிய காவல் அதிகாரிகளுக்கு காவல்துறை இயக்குநர் பிறப்பித்துள்ளார். இதனை அமைச்சரவை குறித்துக் கொண்டது. | ஏற்கனவே அமல்படுத்தப்பட்டுள்ளது; புதிதாக ஆணைகள் தேவைப்படவில்லை. |
| 68. | இயற்கைக்கு மாறாக மரணம் ஏற்படுகிற நேர்வுகளில், | இப்பரிந்துரையை அமல்படுத்தத் தேவையான ஆணைகளை உரிய | |

| | | | |
|---|---|---|---|
| | காவல்துறையினர் மேற்கொள்ளுகின்ற விசாரணை நடவடிக்கைகள், இறந்தவரின் உடலை ஒப்படைப்பது போன்றவை, சம்பந்தப்பட்டவர்களை தொல்லைகளுக்குள்ளாக்காமல் மேற்கொள்ள விசாரணை செய்யும் அதிகாரிகளின் சிறப்பு கவனத்துடன் செயல்பட வேண்டும். | காவல் அதிகாரிகளுக்கு காவல்துறை தலைமை இயக்குநர் பிறப்பித்துள்ளார். இதனை அமைச்சரவை குறித்துக் கொண்டது. | " |
| 69. | போராட்டங்கள், பொது வேலை நிறுத்தங்கள் போன்ற சமயங்களில் ஏற்படும் பணத்தேவையை சரிகட்ட காவல் நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும், போதுமான நிரந்தர முன்பணத் தொகையை வழங்கலாம். இத்தகைய செலவுகளுக்கு போதுமான அளவில் பணம் காவல் நிலையங்களில் இல்லாதது காவல் நிலையங்களில் நிலையாக நிலவும் மாமூலுக்கு காரணமாக அமைகிறது. | இப்பரிந்துரை அரசால் செயல்படுத்தப்பட்டு அரசாணை எண்.801, உள்துறை நாள் 18.6.98ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை அமைச்சரவை குறித்துக்கொண்டது. | " |
| 70. | போக்குவரத்துத் துறை ஒட்டுநர் உரிமங்கள், தகுதிச் சான்றுகள் ஆகியவை வழங்குவதில் உள்ள ஒட்டு மொத்த ஊழலையும் பெருமளவு குறைக்க, காவல்துறை, மாநில போக்குவரத்து கழகங்கள், ஆட்டோமொபைல் சங்கம், பிரபல ஆட்டோமொபைல் பணிக்கூடங்கள், ஆகியவற்றில் அவரவர் துறைகளில் தனியாக அமைக்கப்பட்ட சிறு பிரிவுகள் மூலமாக, ஒட்டுநர் உரிமங்களும் வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ்களும் வழங்க அதிகாரமளிக்கப்படலாம். இந்த வசதிகள் தற்போது வாகன பழுது பார்க்கும் பட்டறைகள் மாகக் கட்டுப்பாடு சான்றிதழ் பெறுவதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகள் போன்று அமைந்திருக்கும். | போக்குவரத்துத் துறையில் கணினிமயமாக்கல், இடைத்தரகர்களை வெளியேற்றல் மற்றும் நடைமுறைகளை எளிமையாக்கல் போன்ற செயல்களை ஏற்கனவே நடைமுறைப்படுத்துவதை அமைச்சரவை குறித்துக் கொண்டது. தற்போதைய முறைகளை நீடிக்கலாம் என அமைச்சரவை முடிவெடுத்தது. | ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் புதிதாக ஆணை தேவைப்படவில்லை. |
| 71. | காவல்துறை வாகனங்களை பழுதுபார்க்கும் பட்டறைகளில் பணிபுரியும் தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் மாநில போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்கள் ஆகியவர்களை, இதற்கெனத் தனிாக பயிற்சியளித்து விபத்து வழக்குகளில் சிக்கும் வண்டிகளை அவர்கள் ஆய்வு செய்து, அதற்கான சான்றிதழ்கள் வழங்க உரிமம் வழங்கலாம். இது வியத்திற்குள்ளான வண்டிகளை காலதாமதமின்றி துரிதமாக விடுவிக்க வழிசெய்யும். | போக்குவரத்துத் துறையில் கணினிமயமாக்கல், இடைத்தரகர்களை வெளியேற்றல் மற்றும் நடைமுறைகளை எளிமையாக்கல் போன்ற செயல்களை ஏற்கனவே நடைமுறைப்படுத்துவதை அமைச்சரவை குறித்துக் கொண்டது. தற்போதைய முறைகளை நீடிக்கலாம் என அமைச்சரவை முடிவெடுத்தது. | தற்போதைய முறைகள் நீடிக்கலாமென முடிவெடுக்கப்பட்டுள்ளதால் ஆணைகள் ஏதும் தேவைப்படவில்லை. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 72. | வாகன விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்குவதை துரிதப்படுத்த கீழ்க்கண்ட வழிகளை கையாளலாம்:–<br>(1) குறிப்பிட்ட தீர்ப்பாயங்களில் நேரக ஈட்டுத்தொகை கேட்டு வழக்குகளை பதிய அனுமதிக்கலாம்.<br>(2) வாகனச் சட்டப்பிரிவு 158(6)ன் கீழ் பதியப்படும் ஒவ்வொரு விபத்து வழக்குகளிலும், காவலர்கள் நேர்மையான அறிக்கைகளை தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பிக்கிறார்களா என்பதை உறுதிபடுத்தலாம். கூட்டு வழக்குகளை பதிய அனுமதிக்கலாம்.<br>தீர்ப்பாயங்கள் உடனடி வழக்குகளை எடுத்து, நடவடிக்கை தொடர்ந்து குற்றமில்லா ஈட்டுத்தொகை (Liability without fault) வழங்க அனுமதியளிக்கலாம். | இப்பரிந்துரையை ஏற்றுக்கொண்டு சட்டத்துறையை கலந்தாலோசித்து உயர்நீதிமன்றத்தை தொடர்பு கொள்ளலாம் என அமைச்சரவை முடிவு செய்தது. | உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து உரிய ஆணைகள் வெளியிடப்பட உள்ளது. |
| 73. | வாடகை கார், மூன்று சக்கர வண்டி உட்பட எல்லா வாகனங்களுக்கும் அவ்வப்போது பயணக் கட்டணம் மாற்றியமைக்க அரசுக்கு ஆலோசனை கூற ஒய்வு பெற்ற மாவட்ட நீதிபதி ஒருவரின் தலைமையில் மாநில அளவிலான ஒரு வாகனக் கட்டணக் குழு (Transport Tariff Committee) அமைக்கலாம். | போக்குவரத்துத் துறையில் இது தொடர்பான ஒரு குழு ஏற்கனவே உள்ளதால் இப்பரிந்துரை அமலாக்கப்பட்டதாக கருதலாம் என அமைச்சரவை முடிவு செய்தது. | வாகனக் கட்டணக்குழு ஏற்கனவே செயல்பட்டு வருவதால் ஆணைகள் ஏதும் தேவைப்படவில்லை. |
| | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | | |
| 80. | தற்போது சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கட்டிட வரைவு மற்றும் அனுமதி விண்ணப்பங்களை முடிவு செய்யும்போது குழுமத்தில் தனி உள் (Internal) சுற்றறிக்கை அறிவுரைகளை கணக்கில் கொள்கிறது. மேற்படி விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளும் வகையில் நடைமுறையில் உள்ள வளர்ச்சி மற்றும் கட்டுப்பாடு விதிகளை வெளியீடுகளுடன் துணை சுற்றேடு ஒன்றையும் இணைக்கலாம். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. கையேடு விரைவாக பொது மக்கள் உபயோகத்திற்கு கொண்டு வரப்பட இருக்கிறது. | கையேடுகள் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யப்பட்டுள்ளன. |
| 81. | கட்டிட வரைவு அனுமதி விண்ணப்பங்களை கையாளும்போது துண்டு துண்டாக மறுப்புகளை எழுப்புவதையும் வேண்டுமென்று தாமதம் செய்வதையும் குழுமத்தின் உயர் அதிகாரிகளின் தீவிர கண்காணிப்புகளால் கட்டுப்படுத்த வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| 82. | நகர் மற்றும் நாட்டுப்புற வளர்ச்சி சட்டப் பிரிவு 113ன் கீழ் அரசினால் விதிகளைத் தளர்வு செய்யும் அதிகாரத்தினை வரையறை செய்யப்பட வேண்டும். இதில் தரைப் பகுதி குறியீடு (Floor Space Index) அல்லது தீத்தடுப்பு தொடர்பான விதிகளுக்கு விலக்கு அளிக்கக்கூடாது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | " |
| 83. | விலக்களிக்கப்பட்ட ஒவ்வொரு நேர்வும் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் சட்டப் பேரவையில் வைக்கப்பட வேண்டும். | விதி தளர்வுகள் வழங்குவது அரசின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் இருப்பதால், விதி தளர்வுகள் வழங்கப்பட்டவை பற்றிய விவரங்களை சட்டப் பேரவையில் வைப்பதற்கு தேவை எழவில்லை என்று கருதப்பட்டது. | ஏற்கப்படவில்லை. |
| 84. | சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அனுமதி பெறாத கட்டுமானங்களைக் கையாளும் தற்போதுள்ள விதிமுறைகளை மேலும் கடுமையாக்கலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. விதிமுறைகளை மேலும் கடுமையாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | விதிமுறைகளை மேலும் கடுமையாக நடைமுறைப்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 85. | கட்டிடக் கலைஞர்கள், பொறியாளர்கள், விலைமதிப்பீட்டாளர்கள் கட்டுமானத் தொழில் முனைவோர் ஆகியோரிடம் இருந்து 3 உறுப்பினர்களை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் நியமனம் செய்யலாம். | தொழில்நுட்பம் தொிந்தவர்களை குழுமத்தில் உறுப்பினராக சேர்த்துக் கொள்ள அரசு ஏற்கனவே முடிவு செய்து பின்வரும் நபர்களை குழும உறுப்பினர்களாக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது:-<br>1) அண்ணா பல்கலைக் கழகத்தின் கட்டிடக் கலை மற்றும் திட்டமிடல் பிரிவுப் பேராசிரியர்;<br>2) சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூத்த தலைமை திட்ட அமைப்பாளர்;<br>நகர் மற்றும் ஊரகத் திட்ட இயக்ககத்தின் இணை இயக்குநர் குழுமத்தின் உறுப்பினராக தொடரலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு மேல் வேறு யாரையும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் உறுப்பினராக நியமிக்க அவசியம் எழவில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. | தற்போதைய நிலையில் மாறுதல் தேவையில்லையென்ற முடிவுக்கேற்ப ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 86. | மாநகரின் முறையான மேம்பாட்டிற்கு ஒத்திசைவான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எதிர் கொள்ளும் நடைமுறை பிரச்சினைகளை விவாதிக்க கட்டிடக் கலைஞர்கள், பொறியாளர்கள், வணிகப் பெருமக்கள் ஆகியோர்கள், குறித்த காலத்திற்கு ஒருமுறை கருத்தரங்குக் கூட்டத்தை நடத்தலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. கருத்தரங்கு/கூட்டங்கள், காலந்தோறும் நடத்தப்படுகின்றன. | உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 87. | சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் எந்த ஒரு தனிப்பட்ட விண்ணப்பதாரருக்கும் அனுமதி வழங்குமுன் மின்வாரியம், குடிநீர் வழங்கல் வாரியம் போன்றவற்றின் | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | " |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | அனுமதி பெறுவதை வலியுறுத்தக் கூடாது. புது இடங்களின் மேம்பாட்டிற்கு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், மின்வாரியம், குடிநீர் வழங்கல் வாரியம் போன்றவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். | | |
| 88. | தற்போதுள்ள முறைப்படி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்ய அரசிடம் செல்வதற்கு பதிலாக குழுமத்தில் ஒரு மேல்முறையீட்டு மன்றம் ஏற்படுத்தலாம். இம்மேல்முறையீட்டு மன்றம் நீதிவழங்கும் நோக்கம் கொண்ட அமைப்பாக எற்படுத்தலாம். | தற்போதுள்ள முறையின்படி மேல்முறையீட்டு மனுக்களை ஆய்வு செய்து ஆணை பிறப்பிக்கும் பொறுப்பு அரசிடமே தொடர்ந்து நீடிக்கலாம் என முடிவு செய்யப்பட்டது. | தற்போதுள்ள முறையே தொடர்ந்து பின்பற்ற ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 89. | சென்னை மேயர் அவர்களை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திலும், குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திலும் தலைவராக நியமிக்கலாம். இதனால் அடித்தள மக்களின் அத்தியாவசியமான அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைந்து நடைமுறைபடுத்தவும் அதற்கான ஒத்துழைப்பை பெறவும் முடியும். | தற்போதுள்ள முறையின்படி, குழுமத்தின் பொறுப்பு வகிக்கும் அமைச்சர், குழுமத்தின் தலைவராக தொடர்ந்து நீடிக்கலாம் என முடிவு செய்யப்பட்டது. சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தைப் பொறுத்தவரை, அவ்வாரியப் பொறுப்பு வகிக்கும் அமைச்சரே வாரியத்தின் தலைவராக நீடிப்பார் என்று முடிவு எடுக்கப்பட்டது. | " |
| 90. | திட்டமிடல் மற்றும் கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி வேண்டும் விண்ணப்பங்களின் மீது நடவடிக்கை எடுக்க வசதியாக மேம்பாட்டு கட்டுப்பாட்டு விதிகளை உள்ளடக்கிய விரிவான கையேடு ஒன்றை நகர் மற்றும் நாட்டுப்புற திட்டமிடல் இயக்குநர் தயாரித்து வழங்கலாம். இவ்வாறு தயாரிக்கப்படுகின்ற கையேட்டினை கட்டிடத்திற்கு அனுமதி கோரும் விண்ணப்பதாரருக்கு விலைக்கு வழங்கலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதுபற்றிய கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. | மேம்பாட்டுக் கட்டுப்பாட்டு விதிகளை உள்ளடக்கிய விரிவான கையேடு தயாரிக்க ஆணை வெளியிடப் பட்டுள்ளது. |
| 91. | திட்டமிடும் அதிகாரிகள் விண்ணப்பங்களை நிராகரிக்கும் போது அவ்வாறு நிராகரித்து ஆணையிட்ட ஆணையின் நகல் ஒன்றையும் கட்டிடம் கட்ட அனுமதி கோரி விண்ணப்பித்த நபருக்கும் சட்டப்படி கண்டிப்பாக அளிக்க வகைசெய்யும் வகையில் நகர் மற்றும் நாட்டுப்புற திட்டமிடல் சட்டம் 1971 பிரிவு 49 (3)ஐ திருத்தலாம். | தற்பொழுது கட்டிட அனுமதி கோரி விண்ணப்பிக்கும் நபருக்கு, அவ்விண்ணப்பத்தின் மீது பிறப்பிக்கப்பட்ட ஆணையின் நகலும், அவ்வாணைக்கான காரணமும் தெரிவிக்கின்ற முறை நடைமுறையில் உள்ளது. ஆகவே நகர் மற்றம் ஊரமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டாம் என்று முடிவெடுக்கப்பட்டது. | தற்போதுள்ள நடைமுறை போதமானதாக உள்ளதால் ஆணைகள் ஏதும் தேவைப்படவில்லை. |
| 92. | வான்வழி நிழற்படத் தொழில்நுட்ப உத்தி (Aerial Photography) மற்றும் நவீன எலக்ட்ரானிக் சாதனங்கள் | ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏற்கனவே 33 பெரிய நகராட்சிகளுக்கு வான்வழி புகைப்படங்கள் தயார் செய்யப்பட்டு உள்ளன. மீதமுள்ள | ஏனைய நகராட்சிகளின் வான்வழி புகைப்படங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | உபயோகம் ஆகிய அறிவியல் முறைகளை உபயோகப்படுத்தி நிலத்தை மண்டலங்களாக வகைப்படுத்தலாம். இதனால், எவையெவை இயற்கை வனவாயில்கள் நிறைந்த பிரதேசம், குடியிருப்பு, வணிக வளாகம், விவசாயம் மற்றும் நிறுவனங்களுக்கான நிலங்கள் என எளிதில் உணர்ந்து கொள்ளலாம். எவ்வளவு அதிகமான பரப்பளவிற்கு முடியுமோ அவ்வளவு பரப்பளவிற்கு விரிந்து குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு மாறாமல் இருத்தல் வேண்டும். | நகராட்சிகளுக்கும் செயல்படுத்தப்படும். | எடுக்கப்பட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 93. | மேம்பாட்டு கட்டுப்பாடு விதிகளை கட்டிட ஒப்பந்தக்காரர்களும் முறையாகப் பின்பற்றி அவர்கள் பொறுப்பேற்கும் வகையில் மாநில அரசு சட்டம் இயற்ற வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேம்பாட்டு கட்டுப்பாட்டு விதிகளை கட்டிட ஒப்பந்தக்காரர்களும் மற்றும் குடியிருப்பு மேம்பாட்டாளர்களும் பின்பற்றி பொறுப்பேற்பதற்கு தேவையான சட்டம் இயற்றப்படும். | தேவையான சட்டம் இயற்ற ஆணையிடப்பட்டுள்ளது. |
| 94. | சிறு குடியிருப்பு வீடுகளை கட்டுபவர்களுக்கு ஏற்றவகையில் எளிதாக்கப்பட்ட நடைமுறைகளை உருவாக்கலாம். கட்டிடம் கட்டுவோர் தனது கட்டிட வரைபடத்தை பதிவு பெற்ற கட்டிடக் கலைஞர்கள் மற்றும் பொறியாளர்களிடம் கட்டிட விதிகளை வீடுகட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட மண்டலத்தில் எவ்வகையிலும் மீறவில்லை என்ற உறுதி செய்து அளிக்கப்படும் சான்றோடு தனது உறுதி மொழிப்பத்திரத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். கட்டிட வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டு விதிக்குப் புறம்பாக கட்டிடத்தில் ஏதேனும் மாற்றமோ, திருத்தமோ செய்திருப்பதாக உள்ளூர் திட்டமிடல் அதிகாரி (Local Planning Authority) கண்டறிந்தால் அதன் விளைவுகளுக்கு விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 95. | அனுமதி இல்லாமல் கட்டிடங்கள் கட்டுவதை கட்டுப்படுத்த நிர்வாகத்தில் உள்ள தற்போதைய சட்டப்படியான அதிகாரங்களை வலுப்படுத்தலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. |
| 96. | பதிவு பெற்ற கட்டிடக் கலைஞர்கள், கட்டிடப் பொறியாளர்கள், கட்டிடம் கட்டும் நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் மாநிலத் தலைமையிடத்தில் உள்ள நகர் மற்றம் நாட்டுப்புறத் திட்டமிடல் வாரியத்தையும் | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் அண்ணா பல்கலைக் கழகத்தின் திட்டமிடல் பிரிவுப் பேராசிரியரும், குழுமத்தின் மூத்த தலைமை நுட்ப திட்ட அலுவலரும் உறுப்பினர்களாக நியமித்து அரசு ஆணையிட்டுள்ளது. ஆகவே, மேலும் அதிக உறுப்பினர்களை நியமிக்க அவசியம் இல்லை என்று கருதப்பட்டது. | ஏற்கனவே ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. புதிதாக மாற்றம் ஏதும் தேவையில்லை என முடிவெடுக்கப்பட்டுள்ளது. |

| பரிந்துரை எண். | பரிந்துரை | எடுக்கப்பட்ட முடிவு | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | ஒவ்வொரு திட்ட அதிகார மன்றத்தின் உறுப்பினர்களாகச் சேர்க்கலாம். | | |
| 97. | ஊள்ளூர் திட்டமிடல் அதிகார மன்றமானது பதிவு பெற்ற கட்டிடக் கலைஞர்கள், பொறியாளர்கள் மற்றும் கட்டிடம் கட்டும் நிறுவனங்கள் ஆகியவற்றின் உள்ளூர் பிரதிநிதிகளுடன் அடிக்கடி கலந்துரையாடல் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் நடைமுறையிலுள்ள சிக்கல்கள் கண்டு அறியப்பட்டு அவைகள் களையப்படுவதற்கு ஆன தீர்வினைக் காண முடியும். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. உள்ளூர் திட்டமிடல் அதிகாரிகள் மற்றும் கட்டிடக் கலைஞர்கள், பொறியாளர்கள் ஆகியோரது கலந்துரையாடல் காலந்தோறும் நடைபெறுவதற்கு வேண்டிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. | உரிய ஆணைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன. |
| | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | | |
| 29. | துறைத் தலைவர்களும் விழிப்புப் பணி அலுவலர்களும் பொதுமக்கள் நலம் காக்கும் இடங்களை திடீர் சோதனையிடும்போது நுகர்வோர் சங்கப் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொண்டால் அது எல்லோரையும் எப்போதும் விழிப்பாக இருக்கச் செய்ய உதவும். | பொது மக்கள் நலம் காக்கும் இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது குறித்து உரிய நெறிமுறைகள் ஏற்கனவே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. முன்னறிவிப்பேதும் இன்றி, இத்தகைய இனங்களில் திடீர் சோதனை நடத்திச் செல்லும்பொழுது, நுகர்வோர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துச் செல்வது நடைமுறையில் சிரமங்களை விளைவிக்கும் என்பதனால், இப்பரிந்துரையினை ஏற்றுக்கொள்ள வேண்டியது இல்லை என முடிவு செய்யப்பட்டது | ஏற்கப்படவில்லை. |
| 98. | தற்போது கூட்டுறவுச் சங்கங்கள், 1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் அடிப்படையில் தொடர்ந்து இயங்கி வரலாம். | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. |
| 99. | மத்திய திட்டக் கமிஷன் சுற்றனுப்பியுள்ள, முன்னுதாரணமான கூட்டுறவுச் சட்ட முன்வடிவைப் பின்பற்றி ஒரு புதிய சட்டத்தை ஏற்படுத்தலாம், அச்சட்டம் அமுலுக்கு வரும் நாளிலிருந்து தோன்றும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், புதிய சட்டம் பொருந்துமாறு ஆணையிடலாம். | முத்திய திட்டக் குழு அனுப்பியுள்ள மாதிரி சட்ட முன்வடிவு மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடம் இருந்து பெறப்பட்டுள்ள தற்சார்புச் சங்கங்களுக்கான வரைவுச் சட்டத்தில் காணும் சிறப்பு அம்சங்களைக் கருத்திற்கொண்டு தற்போது நடைமுறையில் உள்ள 1983–ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்திற்கு தக்க திருத்தங்களை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது. | 1983ம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்திற்கு உரிய திருத்தங்கள் வெளியிடத் தேவையான முன்மொழிவு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமிருந்து கோரப்பட்டுள்ளது. |
| 100. | ஏற்கனவே 1983–ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற ஒரு கூட்டுறவுச் சங்கம் விரும்பினால் புதிய சட்டத்தின் கீழ் மறு பதிவு செய்துகொள்ளவும், வழிவகை செய்யலாம். அதற்குப் பின் அச்சங்கம் 1983–ஆம் ஆண்டுச் சட்டத்திற்குக் கட்டுப்படாது. | மத்திய திட்டக் குழு அனுப்பியுள்ள மாதிரி சட்ட முன்வடிவு மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடம் இருந்து பெறப்பட்டுள்ள தற்சார்புச் சங்கங்களுக்கான வரைவுச் சட்டத்தில் காணும் சிறப்பு அம்சங்களைக் கருத்திற்கொண்டு தற்போது நடைமுறையில் உள்ள 1983–ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்திற்கு தக்க | |

9916—4c

| | | | |
|---|---|---|---|
| | | திருத்தங்களை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது. | |
| 101. | புதிய சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களில், பொது விநியோகத்திற்காக மற்றும் பொதுநலத் திட்டங்களுக்காக செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து அரசுடன் இரு தரப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளலாம். | " | |
| 102. | நடப்பிலுள்ள சில கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தை அதே கூட்டுறவுச் சங்கத்தில் பொதுநலனில் அக்கறை கொண்ட கூட்டுறவாளர்களுக்கு விற்பனை செய்யப் பரிசீலிக்கலாம். இதற்குத் தேவையான சட்டத்திருத்தங்களைக் கொண்டு வரலாம். | ஏற்றுக் கொள்ளப்படவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படாததால் ஆணைகள் ஏதும் தேவைப்படவில்லை. |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**நீதியரசர் திரு ஜி. இராமானுஜம் அவர்களின் தலைமையிலான நிருவாகச் சீரமைப்பு மற்றும் ஊழல் தடுப்புக்கான உயர்நிலைக் குழுவின் முதல் மற்றும் இரண்டாவது அறிக்கைகளில் உள்ள பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த சுருக்கமான விவரம்:**

| வ. எண் | எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தன்மை | பரிந்துரைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை | 91 |
| 2. | மாறுதலுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டவை | 26 |
| 3. | ஏற்கப்பட்டு ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டவை | 19 |
| 4. | கொள்கையளவில் ஏற்கப்பட்டவை. ஆயினும், மைய அரசின் முடிவுக்குப்பின் நடவடிக்கை தொடர உள்ளவை | 36 |
| 5. | ஏற்கப்படவில்லை; எனினும் மாற்று ஏற்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளவை | 12 |
| 6. | ஏற்கப்படாதவை எனினும் தற்போதைய நடைமுறையே தொடரலாமென முடிவெடுக்கப்பட்டவை | 24 |
| 7. | ஏற்கப்படாதவை | 24 |
| | மொத்தப் பரிந்துரைகள் | 232 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## பிற்சேர்க்கை - திருத்தங்கள்

| வ. எண். | பக்கம் | பரிந்துரை எண் | திருத்துமிடம் | திருத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 2 | 5(ii) | இரண்டாவது வரியில் 'பொறுத்த வரையில்' என்ற சொல்லுக்கு முன்பாக | தணிக்கையாளரின் என்ற சொல் சேர்க்கப்பட வேண்டும். |
| 2. | 2 | 6 | பரிந்துரையின் கீழ் ஆறாவது வரியில் 'கண்காணிப்புப் பொறியாளர்' என்ற சொல்லுக்கு முன்பாக | பரிந்துரை எண்.7. |
| 3. | 6 | 24 | பரிந்துரையின் கீழ் மூன்றாவது வரியில் 'நிதித்துறை' என்ற சொல்லுக்கு முன்பாக | அதே பதவித் தரத்தில் உள்ள மற்றொரு துறையைச் சார்ந்த பொறியாளர் ஒருவரையும் என சேர்க்கப்பட வேண்டும். |
| 4. | 14 | 1 | எடுக்கப்பட்ட முடிவின் கீழ் 'மே 1997க்குப் பிறகு. | ல் நடைமுறைக்கு வந்தது, எனவே 1997 என சேர்க்கப்பட வேண்டும். |
| 5. | 18 | 4 | பரிந்துரையின் கீழ் முதல் வரியில் 'ஒரு' என்ற சொல்லுக்கு முன்பாக.. | 'அதற்கு ஏற்பளிப்பு அளிப்பதற்கும்' என சேர்க்கப்பட வேண்டும். |
| 6. | 26 | 6 | எடுக்கப்பட்ட முடிவின் கீழ் 'வருவாய்த்துறை' என்ற தலைப்பின் அடியில் | 'அமைச்சரவைக் கூட்டத்திற்கான குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள 25 சான்றிதழ்களில் கீழ்க்கண்ட எட்டு சான்றிதழ்களை அவற்றிற்கு எதிரே கொடுக்கப்பட்ட துறைகளுக்கு அதிகாரம் வழங்கலாம். வருவாய்த்துறையும் தொடர்ந்து இந்த சான்றிதழ்களை வழங்கலாம்' என சேர்க்கப்பட வேண்டும். |
| 7. | 34 | 58 | பரிந்துரையின் கீழ் மூன்றாவது வரியில் 'மூலம்' என்ற சொல்லுக்கு முன்பாக | 'மற்றும் விவசாயிகள் சங்கங்கள்' என சேர்க்கப்பட வேண்டும். |
| 8. | 40 | 76 | அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் கீழ் | 'முடிவு செய்யப்பட்டுள்ளவாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது' என நிரப்பப்பட வேண்டும். |
| 9. | 41 | 104 | பரிந்துரையின் கீழ் 'பள்ளிகள் மேற்படிப்பு குறித்து' என்ற சொற்கள் நீக்கப்பட வேண்டும். | — |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS